
Om Gam Ganapathaye Namaha

Sri Gurubhyo Namaha



Drig-Drishya viveka

Written by Swami Sri vidyaranya muni

ஶ்ரீவித்யாரண்ய முனிவர் எழுதி அருளிய

த்ருக்-த்ருச்ய விவேக:

ஸ்ரீ குரு வந்தனம் - श्री गुरु वन्दनम्

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवोमहेश्वरः ।
गुरुः साक्षात्परंब्रह्म तस्मै श्रीगुरवे नमः ।।

குருர் ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர் தேவோ மஹேச்வர:।
குரு: ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥

குருவே ப்ரஹ்மா; குருவே விஷ்ணு; குருவே மஹேச்வர தேவர். குருவே நேரடியாக நம் முன் நிற்கின்ற மேலான ப்ரஹ்ம தத்துவம். அந்த குருவிற்கு நமஸ்காரங்கள் ஆகட்டும்.

नारायणं पद्मभ(भु)वं वसिष्ठं शक्तिञ्च तत्पुत्र पराशरञ्च ।
व्यासं शुकं गौडपदं महान्तं गोविन्दयोगीन्द्रमथास्यशिष्यम् ।।
श्रीशंकराचार्यमथास्य पद्मपादञ्च हस्तामलकञ्चशिष्यम् ।
तंत्रो(तो)टकंवार्तिककारमन्यानस्मद्गुरून् संततमानतोस्मि ।।

நாராயணம் பத்மப(பு)வம் வசிஷ்டம் சக்திஞ்ச தத்புத்ர பராசரஞ்ச। வ்யாஸம் சுகம்கௌடபதம் மஹாந்தம் கோவிந்தயோகீந்த்ர மதாஸ்யசிஷ்யம்॥ ஸ்ரீசங்கராசார்யமதாஸ்ய பத்மபாதஞ்ச ஹஸ்தாமலகஞ்சசிஷ்யம்। தம்த்ரோ(தோ)டகம் வார்த்திககாரமன்யாந் அஸ்மத்குரூந் ஸந்ததமானதோஸ்மி॥

நாராயணர், அவருடைய நாபிகமலத்திலிருந்து தோன்றிய ப்ரஹ்மா, அவருடைய மானஸ புத்திரராகிய வசிஷ்டர், அவருடைய புத்திரராகிய சக்தி, அவருடைய புத்திரராகிய பராசரர், அவருடைய புத்திரராகிய வியாஸர், அவருடைய புத்திரராகிய சுகர், (இதுவரை தந்தையே குரு. இதற்கு மேல் குரு-சிஷ்யர்கள்வேறுவேறு.) சுகருடைய சிஷ்யராகிய பூஜைக்குரிய கௌடபாதர், அவருடைய சிஷ்யராகிய யோகீந்திரராகிய கோவிந்த பகவத்பாதர், அவருடைய சிஷ்யராகிய ஸ்ரீசங்கராச்சார்யார், அவருடைய சிஷ்யர்களாகிய பத்மபாதர், ஹஸ்தாமலகர், த்ரோ(தோ)டகர், வார்த்திககாரர் என்கின்ற சுரேச்வராசார்யார், மற்றும் அவர்களைத் தொடர்ந்து என்னுடைய குரு வரை வந்த மற்ற குருமார்களையும் எப்பொழுதும் நமஸ்கரித்தவனாக இருக்கின்றேன்.

श्रुतिस्मृतिपुराणानामालयं करुणालयम् ।
नमामि भगवत्पादं शंकरं लोकशंकरम् ।।

ச்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்।
நமாமி பகவத்பாதம் சங்கரம் லோகசங்கரம்॥

ச்ருதி, ஸ்ம்ருதி மற்றும் புராணங்களின் உறைவிடமாகவும், கருணை

உறைகின்றவராகவும், லோகத்திற்கு நன்மை பயப்பவருமாகிய பகவான் ஸ்ரீசங்கரரின் பாதங்களை நமஸ்கரிக்கின்றேன்.

शंकरं शंकराचार्यं केशवं बादरायणम् ।
सूत्रभाष्यकृतौ वन्दे भगवन्तौ पुनः पुनः ।।

சங்கரம் சங்கராசார்யம் கேசவம் பாதராயணம் ।
ஸூத்ரபாஷ்ய க்ருதௌ வந்தே பகவந்தௌ புந: புந: ।।

ஸாக்ஷாத் கேசவராகிய ப்ரஹ்மஸூத்ரம் செய்த வியாஸ பகவானையும், ஸாக்ஷாத் சங்கரராகிய ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யம் செய்த ஸ்ரீசங்கர பகவானையும் மறுபடியும் மறுபடியும் நான் வணங்குகின்றேன்.

ईश्वरो गुरुरात्मेति मूर्तिभेदविभागिने ।
व्योमवत्व्याप्त देहाय दक्षिणामूर्तये नमः ।।

ஈச்வரோ குருராத்மேதி மூர்த்திபேத விபாகிநே ।
வ்யோமவத்வ்யாப்த தேஹாய தக்ஷிணாமூர்த்தயே நம: ।।

ஈச்வரனாக, குருவாக, ஆத்மாவாக உடலால் பிரிந்திருப்பவரே, ஆகாசம் போன்று எங்கும் விரவியிருக்கின்ற உடலை உடையவரே தக்ஷிணாமூர்த்தியே உங்களுக்கு நமஸ்காரங்களாகட்டும்.

सदाशिवसमारंभां शंकराचार्य मध्यमां ।
अस्मदाचार्य पर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ।।

ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் ।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ।।

ஸதாசிவரிடமிருந்து ஆரம்பித்து, சங்கராச்சார்யரை மத்தியில்கொண்டு, என்னுடைய ஆச்சார்யர் வரையுள்ள குருபரம்பரையை வணங்குகின்றேன்

ஈச்வர வந்தநம் - ईश्वर वन्दनम्

ओं.यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै।
तं ह देवमात्मबुद्धिप्रकाशं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ।।

ஓம். யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை । தம் ஹ தேவம் ஆத்மபுத்தி ப்ரகாசம் முமுக்ஷு ர்வை சரணமஹம் ப்ரபத்யே ।।

ஓம். எவர் ப்ரஹ்மாவை முதலில் படைத்தாரோ, எவர் அவருக்கு வேதங்களை அருளினாரோ, புத்தியை ப்ரகாசிக்க செய்கின்ற அந்த தேவனின் பாதங்களை முமுக்ஷு வாகிய நான் சரணடைகின்றேன்.

--------ஓம்--------



“ओम्. असतो मा सद्गमय!

तमसो मा ज्योतिर्गमय!!

मृत्योर्माऽमृतम् गमय ।।”

।। ओम् शान्तिः शान्तिः शान्तिः ।।

(बृहदारण्यक उपनिषत् 1-3-28)

“ஓம். அஸதோ மா ஸத்கமய ! தமஸோ மா ஜ்யோதிர் கமய !!
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய !!!
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஓம்
பொய்மையிலிருந்து என்னை ஸத்தியத்திற்கு அழைத்துச் செல்வாயாக !
இருளிலிருந்து என்னை ஒளியை நோக்கி அழைத்துச் செல்வாயாக !!
மரணத்திலிருந்து என்னை மரணமில்லா நிலைக்கு அழைத்துச் செல்வாயாக !!!
மூன்றுவித துக்கங்களிலிருந்தும் சாந்தி உண்டாகட்டும்.
(ப்ருஹதாரண்யக உபநிஷத். 1-3-28)

ॐ

॥ दृग्दृश्य विवेकः ॥

॥ <u>த்ருக் த்ருஷ்ய விவேகம்</u> ॥

“தந் மே மன: சிவஸங்கல்பமஸ்து”-
(என் மனம் மங்களமானவற்றையே நினைக்கட்டும்)-

இந்த ***‘த்ருக்-த்ருஷ்ய விவேகம்’*** *என்ற க்ரந்தமானது ச்ருங்கேரி சாரதா பீடத்தை அலங்கரித்த ஸ்ரீ ஸ்வாமி வித்யாரண்ய முனி அவர்களால் எழுதப்பட்டதாகும்.* ***‘ஆத்ம-அனாத்ம விவேகம்’****- என்ற நூல் ‘ச்ரவண’ ப்ரதானமாகும். இந்த* ***‘த்ருக்-த்ருஷ்ய விவேகம்’*** *என்பது ‘மனன’ ப்ரதானமானதாகும். அதனால்,* ***‘ஆத்ம-அனாத்ம விவேகம்’*** *என்ற நூலை கேட்ட பிறகு இந்த நூலை ச்ரவணம் செய்தால் மிகவும் நலம் பயக்கும்.*

த்ருக்- என்றால் பார்ப்பவன் என்று அர்த்தமாகும். த்ருஷ்யம் என்றால் பார்க்கப்படுபவைகள் என்றும் அர்த்தமாகும். பார்ப்பவனாகிய த்ருக் எப்போதும் பார்க்கப்படுவதான த்ருஷ்யமாக ஆக முடியாது. அதுபோலவே, பார்க்கப்படுகின்ற த்ருஷ்யம் பார்ப்பவனாகிய த்ருக்காக ஆகவே முடியாது. ஆனால், நாம் விவேகமின்மையினால் த்ருக்காகிய என்னையும், த்ருஷ்யங்களாகிய இந்த தேஹம் முதலியவற்றையும் ஒன்றாக்கி, தேஹத்தை நான் என்று நினைத்து மோஹத்தையும்-சோகத்தையும் அடைகின்றோம். இதுவே ஸம்ஸாரமாகும். த்ருக்கையும்-த்ருஷ்யங்களையும் பிரித்து அறிந்து கொண்டால் மோஹம் நாசமாகும். மோஹம் நாசமானால் ஸம்ஸார சோகமும் இல்லாமல் போகும். மோக்ஷம் அடையப்பட்டதாகும். ஆகவே, இந்த நூலானது த்ருக்-த்ருஷ்ய விவேகம் மூலம் மோக்ஷத்தை அடைவதற்கு ஸாதனமாக ஆகின்றது. இதனை மிகவும் பக்தியோடும், ச்ரத்தோடும், கவனமாகவும் ச்ரவணம் செய்தும், மனனம் செய்தும், நிதித்யாஸனம் செய்தும் முமுக்ஷுக்கள் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைய இறையருளும்-குருவருளும் உண்டாக ப்ரார்த்திக்கின்றோம்.

இதி ஓம் சம்.

'ஆத்ம-அனாத்ம விவேகம்'- *என்ற நூலின் முதல் ச்லோகத்தை ஆதார மாகக் கொண்டு இந்த* **'த்ருக்-த்ருஷ்ய விவேகம்'** *இருப்பதால், அதனை முதலில் பார்த்துவிட்டு, இந்த க்ரந்தத்திற்குள் ப்ரவேசிப்போம்.*

दृश्यं सर्वमनात्मा स्यादृगेवात्मा विवेकिनः ।
आत्मानात्मविवेकोऽयं कथितो ग्रंथकोटिभिः ॥
த்ருச்யம் ஸர்வமனாத்மா ஸ்யாத்-த்ருகேவாத்மா விவேகின: ।
ஆத்மானாத்மவிவேகோ(அ)யம் கதிதோ க்ரந்தகோடிபி: ॥
(ஆத்ம-அனாத்ம விவேகம்-1)

__பதார்த்தம்__:

दृश्यम् –*த்ருச்யம்-* *பார்க்கப்படுகின்றவைகளாக இருக்கின்ற*

सर्वम्-*ஸர்வம்-* *அனைத்தும்*

अनात्मा – *அனாத்மா-* *ஆத்மாவல்லாத அனாத்மா*

स्यात् – *ஸ்யாத்-* *ஆகும்.*

(तु) विवेकिनः – *(து) விவேகின: -* *ஆனால், விவேகிகளுக்கு*

दृक् एव – *த்ருக்-ஏவ* *– பார்ப்பவன் மட்டுமே*

आत्मा – *ஆத்மா* *– ஆத்மா (நான்)*

स्यात् – *ஸ்யாத்-* *ஆகும்.*

अयम् – *அயம்* - *இந்த*

आत्मा-अनात्मा-विवेकः-*ஆத்மா-அனாத்ம விவேக:-* *ஆத்ம-அனாத்ம விவேகமானது*

ग्रन्थकोटिभिः - *க்ரந்த-கோடிபி:-* *கோடிகணக்கான நூல்களால்*

कथितः - *கதித:-* *சொல்லப்பட்டுள்ளது.*

__பொழிப்புரை__- பார்க்கப்படுகின்றவைகளாக இருக்கின்ற (புத்தி முதற் கொண்டு - இந்த உலகம் முழுமையும்) அனைத்தும் ஆத்மாவல்லாத (நானல்லாத) அனாத்மா என்ற ஜடமே ஆகும். ஆனால், (உலகியல் மனிதர்களுக்கு வேறாக உள்ள) விவேகிகளுக்கு பார்ப்பவன் மட்டுமே ஆத்மா (நான்) ஆகும். இந்த ஆத்ம-அனாத்ம விவேகமா னது கோடிகணக்கான வேதாந்த நூல்களால் (மந்திரங்களாலும்–ச்லோகங்களாலும்) சொல்லப்பட்டுள்ளது.

_ச்லோகத்திற்கான ப்ரமாண (ஆதாரமான) ஸ்ம்ருதி_

"तत् क्षेत्र-क्षेत्रज्ञयो: याथात्म्यं विवक्षितं स्तौति श्रोतृबुद्धि-प्रोचणार्थम्। "

(शा.भाष्यम् अवतारिका 13-4)

"ऋषिभिर्बहुधा गीतं छन्दोभिर्विविधै: पृथक्।

ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितै: ॥"(गीता13-4)

"தத் க்ஷேத்ர-க்ஷேத்ரக்ஞயோ: யாதாத்ம்யம் விவக்ஷிதம் ஸ்தௌதி ச்ரோத்ருபுத்தி-ப்ரரோசணார்த்தம்" (கீதா 13-4 அவதாரிகா பாஷ்யம்)

அந்த க்ஷேத்ரம் (த்ருஷ்யம்) க்ஷேத்ரக்ஞன் (த்ருக்) இந்த இரு விஷயங்களைப் பற்றிய யதார்த்த தன்மையை சொல்வதற்காக, அதனை குறித்து (கீழ்கண்ட) ஸ்லோகம் ஸ்துதி செய்கின்றது. (ஏனெனில்) கேட்பவர்களுடைய புத்தியில் ருசியை உண்டாக்குவதற்காக

"ரிஷிபிர்-பஹுதா கீதம் சந்தோபிர்விவிதை: ப்ருதக்।

ப்ரஹ்மஸூத்ர-பதைஸ்சைவ ஹேதுமத்பிர்-விநிஸ்சிதை: ॥

(கீதா 13-4)

(வஷிஷ்டர் முதலிய) ரிஷிகளால் பலவிதங்களில் பாடப்பட்டுள்ளது. வேத மந்திரங்களால் விதவிதமாக பிரித்து சொல்லப்பட்டுள்ளது. ப்ரஹ்ம ஸூத்ர பதங்களால் (வாக்கியங்களால்) பலவிதமான ஹேதுக்களாலும் (தர்க்கங்களாலும்-யுக்திகளாலும்) விசேஷமாக நிச்சயம் செய்யப்பட்டுள்ளது.

ஸாக்ஷி (ஆத்மா) பார்ப்பவன் மட்டுமே

रूपं दृश्यं लोचनं दृक् तद्दृश्यं दृक्तु मानसं ।
दृश्याधीवृत्तयस्साक्षी दृगेव न तु दृश्यते ॥ 1 ॥
ரூபம் த்ருச்யம் லோசனம் த்ருக் தத்த்ருச்யம் த்ருக்து மானஸம் ।
த்ருச்யா-தீவ்ருத்தயஸ்-ஸாக்ஷீ த்ருகேவ ந து த்ருச்யதே ॥ 1 ॥

<u>பதவுரை :</u>

रूपं ***ரூபம்*** - *காட்சியாகிய ரூபங்கள்-வர்ணங்கள்*

दृश्यं ***த்ருச்யம்*** - *பார்க்கப்படுகின்ற த்ருஷ்யங்களாகும்.*

लोचनं ***லோசனம்*** - *(அவற்றை பார்க்கின்ற) கண்கள்*

दृक् ***த்ருக்*** - *காண்கின்ற த்ருக் – பார்ப்பவன் ஆவான்.*

तद्-दृश्यं ***தத்-த்ருஷ்யம்*** - *அந்த கண்களும் த்ருஷ்யமாகும்*

तु-दृक् ***து-த்ருக்*** - *ஆனால், பார்க்கின்ற த்ருக்கோ,*

मानसं ***மானஸம்*** - *மனதாகும்.*

धीवृत्तय: ***தீவ்ருத்தயஸ்*** - *மனதின் எண்ணங்களும்*

दृश्या ***த்ருஷ்யா*** - *பார்க்கப்படுகின்ற த்ருஷ்யங்களாகும்.*

तु ***து*** - *ஆனால்*

साक्षी ***ஸாக்ஷீ*** - *பார்க்கின்ற ஸாக்ஷி என்பது*

दृगेव ***த்ருக்-ஏவ*** - *பார்ப்பவன் மட்டுமே ஆவான்.*

न दृश्यते ***ந த்ருஷ்யதே*** - *அது பார்க்கப்படுவதாக ஆவதில்லை.*

<u>பொழிப்புரை:-</u> *காட்சியாகிய ரூபங்கள் பார்க்கப்படுகின்ற **‘த்ருஷ்ய’**ங்களாகும். கண்கள் காண்கின்ற **‘த்ருக்’** ஆவான். அந்த கண்களும் த்ருஷ்யமாகும். ஆனால், <u>மனதே அதனை பார்க்கின்ற த்ருக்காகும்.</u> புத்தியின் எண்ணங்களும் பார்க்கப்படுகின்ற த்ருஷ்யங்களாகும். ஆனால் ஸாக்ஷி என்பவன் பார்க்கின்ற த்ருக் மட்டுமே ஆவான். அவன் பார்க்கப்படுவனாக ஆவதில்லை.*

காட்சியாகிய ரூபங்கள்(வடிவங்களும்-வர்ணங்களும்) பார்க்கப்படுகின்ற த்ருஷ்யங்களாகும்.(அவற்றை பார்க்கின்ற) கண்களானது காண்கின்ற த்ருக் (பார்ப்பவன்) ஆவான். அந்த கண்களும் த்ருஷ்யமாகும். ஆனால், அதனை பார்க்கின்ற த்ருக்கோ (பார்ப்பவனோ),

மனதாகும். புத்தியின் (மனதின் அல்லது அந்தக்கரணத்தின்) எண்ணங் களும் கூட பார்க்கப்படுகின்ற த்ருஷ்யங்களாகும். ஆனால் பார்க் கின்ற ஸாக்ஷி என்ற ஆத்மா என்பவன், பார்ப்பவன் (த்ருக்) மட்டுமே ஆவான். அது (அந்த ஆத்மா) பார்க்கப்படுவதாக ஆவதில்லை. (அதாவது, ஸாக்ஷி என்ற ஆத்மா எப்போதும் பார்க்கப்படுகின்ற த்ருஷ்யமாக எப்போதும் ஆகமுடியாது.)

ச்லோகத்திற்கான ப்ரமாணம் (ஆதாரமான) ஸ்ம்ருதி

“इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते ।
एतद्यो वेत्ति तं प्राहु: क्षेत्रज्ञ इति तद्विद:।।” (गीता.13-1)

“இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே ।
ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஞ இதி தத்வித: ।।”
(கீதா.13-1)

*ஹே! கௌந்தேய! (அர்ஜுனா!) இந்த சரீரமே **க்ஷேத்ரம்** என்று சொல்லப்படுகின்றது. இதனை (இந்த சரீரத்தை) எவன் அறிகின் றானோ, அவனை **க்ஷேத்ரஞன்** என்று அவனை அறிந்தவர்கள் (ஞானிகள்) கூறுகின்றார்கள்*

“क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।
क्षेत्र-क्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ।।” (गीता.13-2)

“க்ஷேத்ரக்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத ।
க்ஷேத்ர-க்ஷேத்ரஞயோர்-ஞானம் யத்தஜ்ஞானம் மதம் மம ।।”
(கீதா.13-2)

ஹே!பாரத! (அர்ஜுனா!) அனைத்து க்ஷேத்ரங்களிலும் (சரீரங்களிலும்) க்ஷேத்ரத்தை (சரீரத்தை) அறிகின்ற க்ஷேத்ரக்ஞனாக (ஸாக்ஷியாக) என்னை (ஈச்வரனை-ப்ரஹ்மத்தை) அறிவீர்களாக!.

“येनेदं सर्वं विजानाति तं केन विजानीयात्-विज्ञातारमरे केन विजानीयात्-इति”
(बृहदारण्यक.उप.2-4-14)

“யேனேதம் ஸர்வம் விஜானாதி தம் கேன விஜானீயாத்-
விக்ஞாதாரமரே கேன விஜானாதி-இதி” (ப்ருஹதாரண்யக.உப.2-4-14)

எவரால் இந்த அனைத்தும் அறியப்படுகின்றதோ, அவரை எவரால் அறிய முடியும்?-அறிபவனை யாரறிவார்?.

"महाभूतान्यहङ्कारो बुद्धिरव्यक्तमेव च ।
इन्द्रियाणि दशैकं च पञ्च चैन्द्रियगोचरा: ॥ "
(गीता 13-5)

"மஹாபூதான்யஹங்காரோ புத்திரவ்யக்தாமேவ ச |
இந்த்ரியாணி தசைகம் ச பஞ்ச சைந்த்ரியகோசரா: || "
(கீதா 13-5)

பஞ்சமஹா பூதங்கள்-5, அஹங்காரம், புத்தி, அவ்யக்தம் மற்றும் இந்த்ரியங்கள் பதினொன்று (மனம்-1, ஞானேந்த்ரியங்கள்-5, கர்மேந்த்ரியங்கள்-5) மற்றும் இந்த்ரிய விஷயங்களும் (ரூபம்-ரஸம் முதலிய 5)…….

பஞ்சமஹா பூதங்கள்-5
ஞானேந்த்ரியங்கள்-5
கர்மேந்த்ரியங்கள்-5
இந்த்ரிய விஷயங்கள்-5
மனம்-1
அஹங்காரம்-1
புத்தி-1
அவ்யக்தம்-1 என மொத்தம் 24 தத்துவங்களும்,

மற்றும் …..

"इच्छा द्वेष: सुखं दु:खं सङ्घातश्चेतना धृति: ।
एतत्-क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ॥"
(गीता 13-6)

"இச்சா த்வேஷ: ஸுகம் துக்கம் ஸங்காதஸ்சேதனா த்ருதி: |
ஏதத்-க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகாரமுதாஹ்ருதம் ||
(கீதா 13-6)

இச்சா (விருப்பு), த்வேஷம்(வெறுப்பு), ஸுகம் (ஆனந்தம்), துக்கம், தேஹம்(ஸங்காதம்), தைர்யம், என்ற இவைகளும், இவைகளுடைய விகாரங்களும்(மாறுபாடுகளும்) க்ஷேத்ரம் ஆகும் என்று உனக்கு சுருக்கமாக கூறினேன்.

(இவை அனைத்தும் த்ருஷ்யங்களாகும்)

<u>யோக ஸூத்ர ப்ரமாணங்கள்</u>

“द्रष्टृ-दृश्ययो: संयोगो हेयहेतु: ।। (योग सूत्र 2-17)

“த்ரஷ்ட்ரு-த்ருச்யயோ: ஸம்யோகோ ஹேயஹேது: |

(யோக ஸூத்ரம் 2-17)

பார்ப்பவன் (த்ரஷ்டா), பார்க்கப்படுகின்றவைகள் (த்ருஷ்யம்) இவைகளுடைய இணைப்பே (சேர்க்கையே) ஸம்ஸார துக்கத்திற்கான (பிறப்பு-இறப்பிற்கு) காரணமாகும்.

“प्रकाश-क्रिया-स्थितिशीलं भूतेन्द्रियात्मकं भोगापवर्कार्थं दृश्यम् ।।”

(योग सूत्र 2-18)

“ப்ரகாச-க்ரியா-ஸ்திதிசீலம் பூதேந்த்ரியாத்மகம் போகாபவர்கார்த்தம் த்ருச்யம் || (யோகஸூத்ரம் 2-18)

ப்ரகாசம்(ஸத்வ குணம்), க்ரியா (ரஜோகுணம்), ஸ்திதி(செயலின்மை-தமோகுணம்) என்ற மூன்று குணங்களும் எதற்கு ஸ்வபாவமோ (இயல்பான தன்மையோ), பஞ்சமஹா பூதங்கள், பத்து இந்த்ரியங் களின் ஸ்வரூபம் எதுவோ, ஜீவர்களுக்கு ஸுக-துக்க போகத்தை தருவது எதுவோ, ஜீவர்களுக்கு அபவர்கம் என்ற மோக்ஷத்தை கொடுப்பது எதுவோ அந்த ப்ரதானம் என்ற மூலப்ரக்ருதி என்ற மாயாவே த்ருஷ்யமாகும்.

காரண சரீரம் என்ற மாயையிலிருந்தே ஆத்மாவிற்கு அந்நியமான அனைத்து நாம-ரூபங்களும் வெளிப்படுகின்றன. ஆகவே, மாயையின் காரியங்களும், அதற்கு காரணமான மூலப்ரக்ருதியும் த்ருஷ்யமாகும்.

“द्रष्टा दृशिमात्र: शुद्धेऽपि प्रत्ययानुपश्य: ।।”

(योग सूत्र 2-20)

“த்ரஷ்டா த்ருசிமாத்ர: சுத்தே(அ)பி ப்ரத்யயாநுபஸ்ய: ||”

(யோகஸூத்ரம் 2-20)

த்ரஷ்டா (த்ருக்) என்பவன் பார்வை சக்தி மட்டுமே ஆகும். (நிர்மலமாக-நிர்விகாரமாக) சுத்தமாக இருந்தாலும் கூட, சித்தத்தின் வ்ருத்திகளை (thoughts) தொடர்ந்து அது வண்ணமாய் இருந்து பார்ப்பவன். சுத்தமான காற்று சமையல் கூடத்தில் உணவின் வாஸனையை சுமந்து செல்வது போலவும், நிறமற்ற நீரானது, அதில்

கலக்கும் வர்ணத்தை தாங்கி இருப்பது போலவும், வெறும் பார்வையானது (consciousness) மனதின் எண்ணங்களுக்கு ஆதாரமாக இருந்து கொண்டு, மனதின் எண்ணங்களை போல தெரிகின்றது.

"यावत्-संजायते किञ्चित्-सत्त्वं स्थावरजङ्गमम् ।
क्षेत्र-क्षेत्रज्ञ-संयोगात्-तद्विद्धि भरतर्षभ ॥ (गीता.13-26)

"யாவத்-ஸஞ்ஜாயதே கிஞ்சித்-ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் |
க்ஷேத்ர-க்ஷேத்ரஞ-ஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப ||
(கீதா 13-26)

ஹே! பரத குலத்தில் காளை போன்றவனே! ஸ்தாவரம் (அசையாதது) -ஜங்கமம் (அசைவது) என்று எதுவெல்லாம் கொஞ்சமும் உண்டா கின்றதோ, இருக்கின்றது என்று எதையெல்லாம் கொஞ்சமும் சொல்கின்றோமோ, அதுவெல்லாம் க்ஷேத்ர (த்ருஷ்யமாகிய மாயா)-க்ஷேத்ரக்ஞ(த்ருக் என்ற ஆத்மா) இரண்டின் சேர்க்கையினாலேயே உண்டாயிற்று – என்று அறிந்து கொள்வாயாக

<u>விஷயங்களை பார்ப்பது கண்களே</u>

नीलपीतस्थूलसूक्ष्मह्रस्वदीर्घादि भेदतः ।
नानाविधानि रूपाणि पश्येल्लोचनमेकधा ॥ 2 ॥
நீலபீதஸ்தூலஸூக்ஷ்மஹ்ரஸ்வதீர்காதி பேதத: ।
நாநாவிதானி ரூபாணி பச்யேல்லோசனமேகதா ॥ 2 ॥

<u>*பதவுரை : -*</u>

नीलपीत ***நீல-பீத*** *- நீல வர்ணம், மஞ்சள் வர்ணம்,*

स्थूल ***ஸ்தூல*** *- ஸ்தூலமானது (பருத்தது)*

सूक्ष्म ***ஸூக்ஷ்ம*** *- ஸூக்ஷ்மமானது (நுண்மையானது)*

ह्रस्व ***ஹ்ரஸ்வ*** *- குட்டையானது*

दीर्घादि ***தீர்காதி*** *- நீண்டது*

भेदतः ***பேதத:*** *- (என்ற) பேதமாக உள்ள (பிரிவானது)*

नानाविधानि ***நாநாவிதானி*** *- பலவிதங்களான*

रूपाणि ***ரூபாணி*** *- ரூபங்களை (வடிவங்களை)*

एकधा ***ஏகதா*** *- ஒன்றாக இருக்கின்ற*

लोचनम् ***லோசனம்*** *- கண்கள்*

पश्येत् ***பச்யேத்*** *- பார்க்கின்றது.*

<u>*பொழிப்புரை:*</u>*-நீலவர்ணம், மஞ்சள் வர்ணம், பருத்தது, நுண்மையானது, குட்டையானது, நீண்டது – (என்ற) பேதமாக உள்ள பலவிதங்களான ரூபங்களை (வடிவங்களை) ஒன்றாக இருக்கின்ற கண்கள் பார்க்கின்றது.*

நீலவர்ணம், மஞ்சள் வர்ணம் என்ற வர்ணங்களையும், பருத்தது (ஸ்தூலமானது), நுண்மையானது (ஸூக்ஷ்மமானது), குட்டையானது (ஹ்ரஸ்வம்) நீண்டது(தீர்க்கம்)- என்ற வடிவங்களாக உள்ள பேதங்களை (பிரிவுகளை) - பலவிதங்களான ரூபங்களை (வடிவங்களை) ஒன்றாக இருக்கின்ற – ஒன்றேயான கண்கள் பார்க்கின்றது. அதாவது, வெளிவிஷயங்களை - உருவங்களை பார்ப்பது கண்களே ஆகும்.

<u>*கண்கள் மூலம் பார்ப்பது மனதே*</u>

आन्ध्यमान्द्यपटुत्वेषु नेत्रधर्मेषु चैकधा ।
संकल्पयेन्मन: श्रोत्रत्वगादौ योज्यतामिदम् ॥ 3 ॥
ஆந்த்யமாந்த்யபடுத்வேஷு நேத்ரதர்மேஷு சைகதா।
ஸங்கல்பயேன்மன: ச்ரோத்ரத்வகாதௌ யோஜ்யதாமிதம் ॥ 3 ॥

<u>*பதவுரை :-*</u>

आन्ध्य	***ஆந்த்ய***	*- குருட்டுத்தன்மை (அந்ததா)*
मान्द्य	***மாந்த்ய***	*- மந்தத்தன்மை (மாந்த்யதா)*
पटुत्वेषु	***படுத்வேஷு***	*- ஸாமர்த்தியமுள்ள தன்மை (படுத்துவம்)*
नेत्रधर्मेषु	***நேத்ரதர்மேஷு***	*- (என்ற) கண்களின் தர்மங்களின்*
च एकधा	***ச ஏகதா***	*- ஒரேவிதமாக*
मन:	***மன:***	*- மனமானது*
संकल्पयेत्	***ஸங்கல்பயேத்***	*- ஸங்கல்பம் செய்வதாக இருக்கின்றது.*
श्रोत्र	***ச்ரோத்ர***	*- காது (ச்ரோத்ரம்)*
त्वगादौ	***த்வக்-ஆதௌ***	*- தோல் (த்வக்-சர்மம்) முதலியவற்றை*
इदम्	***இதம்***	*- இந்த முறையில்*
योज्यताम्	***யோஜ்யதாம்***	*- சேர்த்து பார்க்க வேண்டும்.*

<u>பொழிப்புரை</u>:- கண்களின் தர்மங்களாகிய குருட்டுத்தன்மை(அந்ததா) மந்தத்தன்மை(மாந்த்யதா) ஸாமர்த்திய முள்ளத் தன்மை(படுத்துவம்) (என்ற) தன்மைகளை, ஒரேவிதமாக மனமானது, ஸங்கல்பம் செய்வ தாக (அறிவதாக) இருக்கின்றது. காது (ச்ரோத்ரம்) தோல் (த்வக்-சர்மம்) முதலிய மற்ற இந்த்ரியங்களின் விஷயத்திலும் இந்த முறையில் சேர்த்து பார்க்க வேண்டும்.

அதாவது மனமே இந்த்ரியங்களை அறிகின்றது என்பது ஸித்தமாகும்.

<u>ச்லோகத்திற்கான ப்ரமாண (ஆதாரமான) ச்ருதி</u>

"त्रीण्यात्मनेऽकुरुतेति मनो वाचं प्राणं तान्यात्मनेऽकुरुतान्यत्रमना अभूवं नादर्शमन्यत्रमना अभूवं नाश्रौषमिति मनसा ह्येव पश्यति मनसा शृणोति"

(बृहदारण्यक.उप.1-5-3)

"த்ரீண்யாத்மனே(அ)குருதேதி மனோ வாசம் ப்ராணம் தாந்யாத்மனே(அ)குருதாந்யத்ரமனா அபூவம் நாதர்சமந்யத்ரமனா அபூவம் நாச்ரௌஷமிதி மனஸா ஹ்யேவ பச்யதி மனஸா ச்ருணோதி"

(ப்ருஹதாரண்யக உபநிஷத் 1-5-3)

பரமாத்மா(ஸாக்ஷி) தனக்காக மனம், வாக், ப்ராணன் என்ற மூன்றையும் தனக்காக படைத்துக் கொண்டார். என் மனம் வேறு இடத்தில் (சிந்தனையில்) இருந்தது அதனால் நான் பார்க்கவில்லை. என் மனம் வேறு இடத்தில் (சிந்தனையில்) இருந்தது அதனால் நான் கேட்க வில்லை – என்று (நம் அனுபவத்தில் பார்க்கின்றோம்). (அதனால்) மனதினாலேயே பார்க்கின்றான், மனதினாலேயே கேட்கின்றான்.

மனம்

काम: संकल्पसंदेहौ श्रद्धाश्रद्धे धृतीतरे ।
ह्रीर्धीर्भीरित्येवमादीन् भासयेत्येकधा चितिः ॥ 4 ॥

காம: ஸம்கல்பஸந்தேஹௌ ச்ரத்தாச்ரத்தே த்ருதீதரே ।
ஹ்ரீர்தீர்பீரித்யேவமாதீன் பாஸயேத்யேகதா சிதி: ॥ 4 ॥

பதவுரை:-

काम:	***காம:***	- *ஆசை என்ற காமம்*
संकल्प	***ஸம்கல்ப***	- *ஸங்கல்பம் என்ற நிச்சய எண்ணம்*
संदेहौ	***ஸம்தேஹௌ***	- *சந்தேகம்*
श्रद्धाश्रद्धे	***ச்ரத்தா-அச்ரத்தே***	- *நம்பிக்கை-நம்பிக்கையின்மை*
धृति	***த்ருதி***	- *தைரியம்*
इतरे	***இதரே***	- *மற்றவைகளாகிய*
ह्री:	***ஹ்ரீ:***	- *வெட்கம்*
धी:	***தீ:***	- *அறிவு (புத்தி)*
भी:	***பீ:***	- *பயம்*
इति एवम्	***இதி ஏவம்***	- *என்ற இவ்விதமான*
आदीन्	***ஆதீன்***	- *முதலானவைகளை*
एकधा	***ஏகதா***	- *ஒன்றேயான*
चिति:	***சிதி:***	- *ஆத்ம சைதன்யம்*
भासयेति	***பாஸயேதி***	- *ப்ரகாசிக்கின்றது.*

பொழிப்புரை:- *ஆசை என்ற காமம், ஸங்கல்பம் என்ற நிச்சய எண்ணம், சந்தேகம், ச்ரத்தை என்ற நம்பிக்கை, அச்ரத்தை என்ற நம்பிக்கையின்மை, த்ருதி என்ற தைரியம், மற்றும் இவற்றிற்கு வேறான ஹ்ரீ என்ற வெட்கம், தீ: என்ற அறிவு (புத்தி), பீ: என்ற பயம் என்ற இவ்விதமான முதலானவைகளை (புத்தி வ்ருத்திகளை-எண்ணங்களை) ஒன்றேயான ஸாக்ஷியாகிய ஆத்ம சைதன்யம் ப்ரகாசிக்கின்றது.*

<u>ச்லோகத்திற்கான ப்ரமாண (ஆதாரமான) ச்ருதி-ஸ்ம்ருதி</u>

कामः संकल्पो विचिकित्सा श्रद्धाऽश्रद्धा

धृतिरधृतिर्ह्रीर्धीर्भी-रित्येतत्सर्वं मन एव ॥ (बृह.उप.1-5-3)

"காம: ஸம்கல்ப விசிகித்ஸா ச்ரத்தா(அ)ச்ரத்தா
த்ருதிரத்ருதிர்ஹ்ரீர்தீர்பீர்-இத்யேதத்-ஸர்வம் மன ஏவ"
(ப்ருஹதாரண்யக உபநிஷத் 1-5-3)

ஆசை என்ற காமம், ஸங்கல்பம் என்ற நிச்சய எண்ணம், விசிகித்ஸா என்ற சந்தேகம், ச்ரத்தை என்ற நம்பிக்கை, அச்ரத்தை என்ற நம்பிக்கையின்மை, த்ருதி என்ற தைரியம், மற்றும் ஹ்ரீ என்ற வெட்கம், தீ: என்ற அறிவு (புத்தி), பீ: என்ற பயம் என்ற இவ்விதமான அனைத்தும் மனதே ஆகும்.

"इच्छा द्वेषः सुखं दुःखं सङ्घातश्चेतना धृतिः ।

एतत्-क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ॥"

(गीता 13-6)

"இச்சா த்வேஷ: ஸுகம் துக்கம் ஸங்காதஸ்சேதனா த்ருதி: |
ஏதத்-க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகாரமுதாஹ்ருதம் ||
(கீதா 13-6)

இச்சா (விருப்பு), த்வேஷம்(வெறுப்பு), ஸுகம் (ஆனந்தம்), துக்கம், தேஹம்(ஸங்காதம்), தைர்யம், என்ற இவைகளும், இவைகளுடைய விகாரங்களும்(மாறுபாடுகளும்) க்ஷேத்ரம் ஆகும் என்று உனக்கு சுருக்கமாக கூறினேன்.

ஸர்வ ஸாக்ஷியாகிய ஆத்மாவின் தன்மைகள்

नोदेति नास्तमेत्येषा न वृद्धिं याति न क्षयम् ।
स्वयं विभात्यथान्यानि भासयेत्साधनं विना ॥ 5 ॥
நோதேதி நாஸ்தமேத்யேஷா ந வ்ருத்திம் யாதி ந க்ஷயம் ।
ஸ்வயம் விபாத்யதான்யானி பாஸயேத்ஸாதனம் வினா ॥ 5 ॥

பதவுரை *:- கா*

नोदेति	***நோதேதி(ந-உதேதி)***	*- (அந்த ஸாக்ஷி)உதிப்பதில்லை.*
नास्तमेति	***ந-அஸ்தமேதி***	*-(அந்த ஸாக்ஷி) அஸ்தமிப்பதில்லை.*
एषा	***ஏஷா***	*- இந்த ஆத்ம சைதன்யம்*
वृद्धिं	***வ்ருத்திம்***	*- வளர்ச்சியை*
न याति	***ந யாதி***	*- அடைவதில்லை.*
क्षयम्	***க்ஷயம்***	*- தேய்வை*
न (याति)	***ந (யாதி)***	*- அடைவதில்லை.*
स्वयं	***ஸ்வயம்***	*- ஸ்வயமாக*
विभाति	***விபாதி***	*- ப்ரகாசிக்கின்றது- விளங்குகின்றது*
अथ	***அத***	*- பிறகு, மேலும்*
साधनं विना	***ஸாதனம் வினா***	*-ஸாதனங்கள்(கருவிகள்) இல்லாமல்*
अन्यानि	***அந்யானி***	*- பிறவற்றையும்*
भासयेत्	***பாஸயேத்***	*- ப்ரகாசிக்கின்றது-அறிகின்றது.*

பொழிப்புரை:*(அந்த ஸாக்ஷி)உதிப்பதில்லை. (அந்த ஸாக்ஷி) அஸ்தமிப்பதில்லை. இந்த ஆத்ம சைதன்யம் வளர்ச்சியை அடைவதில்லை. தேய்வை அடைவதில்லை. ஸ்வயமாக ப்ரகாசிக்கின்றது - விளங்குகின்றது. பிறகு, மேலும் ஸாதனங்கள்(கருவிகள்) இல்லாமல் பிறவற்றையும் ப்ரகாசிக்கின்றது-அறிகின்றது.*

<u>*ச்லோகத்திற்கான ப்ரமாண (ஆதாரமான) ச்ருதி-ஸ்ம்ருதி*</u>

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥ (बृह.उप.4-4-22)

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோ(அ)யமக்னி: । தமேவ பாந்தமனுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥ (முண்.உப.2-2-10)

அந்த ப்ரஹ்ம தத்துவத்தில் ஸூரியன் ப்ரகாசிப்பது இல்லை. சந்திரனும் நட்சத்திரங்களும் ப்ரகாசிப்பது இல்லை. மேலும், இந்த மின்னலும் கூட ப்ரகாசிப்பது இல்லை. அவ்வாறிருக்க, இந்த அக்னியானது எவ்வாறு ப்ரகாசிக்கும்? அந்த ஆத்ம தத்துவம் ப்ரகாசிப்பதை தொடர்ந்தே மேல் சொன்னவை அனைத்தும் ப்ரகாசிக்கின்றன. இந்த ஆத்ம தத்துவத்தினுடைய ப்ரகாசத்தினாலேயே அந்த அனைத்தும் ப்ரகாசிக்கின்றன.

"न साधुना कर्मणा भूयान्नो एवासाधुना कनीयान्" (बृह.उप.4-4-22)

"ந ஸாதுனா கர்மணா பூயாந்நோ ஏவாஸாதுனா கநீயான்" (ப்ருஹதாரண்யக.உப. 4-4-22)

இந்த ஆத்மா புண்ணிய கர்மங்களால் நிச்சயமாக வளர்வதுமில்லை, பாப கர்மங்களால் தேய்வதுமில்லை.

"न वर्धते कर्मणा नो कनीयान्….. न लिप्यते कर्मणा पापकेनेति ।"

(बृह.उप.4-4-23)

"ந வர்ததே கர்மணா நோ கநீயான்……. ந லிப்யதே கர்மணா பாபகேனேதி" (ப்ருஹதாரண்யக.உப. 4-4-23)

இந்த ஆத்மா புண்ணிய கர்மங்களால் நிச்சயமாக வளர்வதுமில்லை, பாப கர்மங்களால் தேய்வதுமில்லை.
பாப கர்மத்தோடு தொடப்படுவதில்லை. (ஸம்பந்தப்படுவதில்லை)

"न हि द्रष्टुर्दृष्टेर्विपरिलोपो विद्यतेऽविनाशित्वात्" (बृह.उप.4-3-30)

"ந ஹி த்ருஷ்டுர்த்ருஷ்டேர்விபரிலோபோ வித்யதே (அ)விநாசித்வாத்" (ப்ருஹதாரண்யக.உப. 4-3-30)

பார்ப்பவனுடைய பார்வைக்கு (பார்க்கின்ற சக்திக்கு) மறைப்பானது இருப்பதில்லை. (ஏனெனில் அது) நாசமில்லாத தத்துவமாகும்.

चिच्छायावेशतो बुद्धौ भानं धीस्तु द्विधा स्थिता ।
एकाहंकृतिरन्या स्यादंत:करणरूपिणी ।। 6 ।।
சிச்சாயாவேசதோ புத்தௌ பானம் தீஸ்து த்விதா ஸ்திதா ।
ஏகாஹம்க்ருதிரன்யா ஸ்யாதந்த:கரணரூபிணீ ।। 6 ।।

<u>பதவுரை</u> :-

चिच्छाया	***சித் சாயா***	*- சைதன்யத்தின் ப்ரதிபிம்பத்தின்*
आवेशतो	***ஆவேசதோ***	*- ப்ரவேசமாக (இருந்து கொண்டு)*
बुद्धौ	***புத்தௌ***	*- புத்தியில்*
भानं	***பானம்***	*- அறிவு உண்டாகின்றது.*
धी: तु	***தீ: து***	*- ஆனால், புத்தியோ*
द्विधा	***த்விதா***	*- இருவிதங்களாக*
स्थिता:	***ஸ்திதா:***	*- இருக்கின்றது.*
एक	***ஏக***	*- ஒன்று*
अहंकृति:	***அஹம்க்ருதி:***	*- அஹங்காரம் (என்றும்)*
अन्या	***அன்யா***	*- மற்றொன்று*
अन्त:करणरूपिणी	***அந்த:கரணரூபிணீ***	*– அந்த:கரண வடிவானதாகவும்*
स्याद्	***ஸ்யாத்***	*- ஆகின்றது.*

<u>பொழிப்புரை:-</u> *சைதன்யத்தினுடைய ப்ரதிபிம்பம் புத்தியில் ப்ரவேசமானவுடன் புத்தியில் அறிவு உண்டாகின்றது. ஆனால், புத்தியோ இருவிதங்களாக இருக்கின்றது. ஒன்று அஹங்கார வடிவானது (என்றும்), மற்றொன்று அந்த:கரண வடிவானதாகவும் ஆகின்றது.*

<u>புத்தி (மாயா உபாதி)</u>

1.ப்ரதிபிம்ப சைதன்யம் 2.அஹங்காரம் என்ற அபிமானம் 3.புத்தி வ்ருத்தி

छायाहंकारयोरैक्यं तप्ताय:पिंडवन्मतम् ।
तदहंकारतादात्म्याद्देहश्चेतनतामगात् ॥ 7 ॥
சாயா-ஹங்காரயோரைக்யம் தப்தாய: பிண்டவந்-மதம் ।
ததஹங்கார-தாதாத்ம்யாத்-தேஹச்சேதனதாமகாத் ॥ 7 ॥

<u>பதவுரை</u> :- *கா*

छायाहंकारयो:	***சாயா-அஹம்காரயோ:-***	*சைதன்ய பிரதிபிம்பம் மற்றும் அஹங்காரங்களுடைய*
ऐक्यं	***ஐக்யம்***	*- ஐக்கியமானது*
तप्ताय:	***தப்தாய:***	*- தகிக்கின்ற இரும்பு*
पिंडवन्म	***பிண்டவத்***	*- துண்டைப்போன்றது என்று*
मतम्	***மதம்***	*- நினைக்கப்படுகின்றது.*
तद्	***தத்***	*- அந்த*
अहंकार	***அஹங்கார***	*- அஹங்காரத்தின்*
तादात्म्याद्	***தாதாத்ம்யாத்***	*- அதுமயமான காரணத்தால்*
देह:	***தேஹ:***	*- தேஹமானது*
चेतनताम्	***சேதனதாம்***	*- சைதன்ய தன்மையை*
अगात्	***அகாத்***	*- அடைகின்றது.*

<u>பொழிப்புரை</u>:- *சைதன்ய பிரதிபிம்பம் மற்றும் அஹங்காரங்களுடைய ஐக்கியமானது தகிக்கின்ற இரும்பு துண்டைப்போன்றது என்று நினைக்கப்படுகின்றது. அந்த அஹங்காரத்தின் அதுமயமான காரணத்தால் தேஹமானதுசைதன்ய தன்மையை அடைகின்றது.*

अहंकारस्य तादात्म्यं चिच्छायादेहसाक्षिभिः ।
सहजं कर्मजं भ्रान्तिजन्यं च त्रिविधं क्रमात् ॥ 8 ॥

அஹம்காரஸ்ய தாதாத்ம்யம் சிச்சாயா-தேஹஸாக்ஷிபி: ।
ஸஹஜம் கர்மஜம் ப்ராந்திஜன்யம் ச த்ரிவிதம் க்ரமாத் ॥ 8 ॥

<u>பதவுரை:</u>

चिच्छाया	***சிச்சாயா***	*- சைதன்யத்தின் ப்ரதிபிம்பத்தோடும்*
देहसाक्षिभिः	***தேஹஸாக்ஷிபி:-***	*தேஹத்திலுள்ள ஸாக்ஷியோடும்*
अहंकारस्य	***அஹங்காரஸ்ய-***	*அஹங்காரத்தினுடைய*
तादात्म्यं	***தாதாத்ம்யம்***	*- தாதாத்மிய தன்மையானது*
सहजं	***ஸஹஜம்***	*- ஸஹஜமானது,*
कर्मजं	***கர்மஜம்***	*- கர்மத்தினால் உண்டானது,*
भ्रान्तिजन्यं च	***ப்ராந்திஜம் ச***	*- ப்ராந்தியினால் உண்டானது என்றும்*
क्रमात्	***க்ரமாத்***	*- முறையாக*
त्रिविधं	***த்ரிவிதம்***	*- மூன்று விதங்களாகும்.*

<u>பொழிப்புரை:</u>- சைதன்யத்தின் ப்ரதிபிம்பத்தோடும், தேஹத்திலுள்ள ஸாக்ஷியோடும், அஹங்காரத்தினுடைய தாதாத்மிய தன்மையானது 1.ஸஹஜமானது, 2.கர்மத்தினால் உண்டானது, 3.ப்ராந்தியினால் உண்டானது என்றும், முறையாக மூன்று விதங்களாகும்.

संबंधिनोस्सतोर्नास्ति निवृत्तिस्सहजस्य तु ।
कर्मक्षयात् प्रबोधाच्च निवर्तते क्रमादुभे ॥ 9 ॥
ஸம்பந்திநோஸ்-ஸதோர்நாஸ்தி நிவ்ருத்திஸ்ஸஹஜஸ்ய து ।
கர்மக்ஷயாத் ப்ரபோதாச்ச நிவர்ததே க்ரமாதுபே ॥ 9 ॥

பதவுரை :-

तु	*து*	- ஆனால்
सहजस्य	*ஸஹஜஸ்ய*	- ஸஹஜம் என்ற அஹங்காரத்தின்
सतो:	*ஸதோ:*	- ஸத்தோடு
संबंधिनो	*ஸம்பந்திநோ-*	ஸம்பந்தத்தின்
निवृत्ति:	*நிவ்ருத்தி:*	- நிவ்ருத்தியானது (நீக்கமானது)
नास्ति	*நாஸ்தி*	- இல்லை.
कर्मक्षयात्	*கர்மக்ஷயாத்*	- கர்மம் நாசமாவதாலும்,
प्रबोधात्	*ப்ரபோதாத்*	- ஞான உதயமாவதாலும்
क्रमादुभे	*க்ரமாத் உபே*	- முறையாக இரு ஸம்பந்தங்களும்
च निवर्तते	*ச நிவர்ததே*	- நிவ்ருத்தியாகின்றன.

பொழிப்புரை:- ஆனால் ஸஹஜம் என்ற அஹங்காரத்தின் ஸத்தோடு ஸம்பந்தத்தின் நிவ்ருத்தியானது (நீக்கமானது) இல்லை. கர்மம் நாசமாவதாலும், ஞான உதயமாவதாலும் முறையாக (கர்மஜ ஸம்பந்தம் மற்றும் ப்ராந்தி ஸம்பந்தம் என்ற) இரு ஸம்பந்தங்களும் நிவ்ருத்தியாகின்றன.

अहंकारलये सुप्तौ भवेद्देहोऽप्यचेतनः ।
अहंकार विकासार्धस्स्वप्नस्सर्वस्तु जागरः ॥ 10 ॥
அஹம்கார-லயே ஸுப்தௌ பவேத்தேஹோ(அ)ப்யசேதன: ।
அஹம்கார விகாஸார்தஸ்-ஸ்வப்னஸ்-ஸர்வஸ்து ஜாகர: ॥ 10 ॥

<u>பதவுரை</u>:-

सुप्तौ	***ஸுப்தௌ***	*- ஆழ்ந்த தூக்கத்தில் (ஸுஷுப்தியில்)*
अहंकारलये	***அஹங்கார-லயே-***	*அஹங்காரம் ஒடுங்கிய நிலையில்*
देहो अपि	***தேஹோ அபி***	*- தேஹமும் கூட*
अचेतनः	***அசேதன:***	*- அசேதனமாக-ஜடமாக*
भवेद्	***பவேத்***	*- ஆகின்றது.*
अहंकार	***அஹங்கார***	*- அஹங்காரத்தின்*
अर्धविकास	***அர்தவிகாஸ***	*- பாதி அளவு மலர்ச்சியே*
स्वप्नः	***ஸ்வப்ன:***	*- ஸ்வப்ன (கனவு) அவஸ்தையாகும்.*
सर्वस्तु	***ஸர்வ: து***	*- பூரணமான மலர்ச்சியே*
जागरः	***ஜாகர:***	*- ஜாக்ரத (விழிப்பு) அவஸ்தையாகும்.*

<u>பொழிப்புரை</u>:- *ஆழ்ந்த தூக்கத்தில் (ஸுஷுப்தியில்) அஹங்காரம் ஒடுங்கிய நிலையில், தேஹமும் கூட அசேதனமாக-ஜடமாக ஆகின்றது. அஹங்காரத்தின் பாதி அளவு மலர்ச்சியே ஸ்வப்ன அவஸ்தையாகும் (கனவு நிலையாகும்). பூரணமான மலர்ச்சியே ஜாக்ரத அவஸ்தையாகும் (விழிப்பு நிலையாகும்).*

"अत्र पिताऽपिता भवति माताऽमाता लोका अलोका देवा अदेवा वेदा अवेदा: अत्र स्तेनोऽस्तेनो भवति भ्रूणहाऽभ्रूणहा चाण्डालोऽचाण्डाल: पौल्कसोऽपौल्कस: श्रमणोऽश्रमणस्तापसोऽतापसोऽनन्वागतं पुण्येनानन्वागतं पापेन तीर्णो हि तदा सर्वाञ्छोकान्हृदयस्य भवति ।।"

(बृह.उप.4-3-22)

"அத்ர பிதா(அ)பிதா பவதி மாதா(அ)மாதா லோகா அலோகா தேவா அதேவா வேதா அவேதா: அத்ர ஸ்தேநோ(அ)ஸ்தேநோ பவதி ப்ரூணஹா(அ)ப்ரூணஹா சாண்டாலோ(அ)சாண்டால: பௌல்கஸோ (அ)பௌல்கஸ: ச்ரமணோ(அ) ச்ரமணஸ்தாபஸோ(அ)தாபஸோ (அ)நந்வாகதம் புண்யேனாநந்வாகதம் பாபேன தீர்ணோ ஹி ததா ஸர்வாஞ்சோகான்-ஹ்ருதயஸ்ய பவதி"

(ப்ருஹதாரண்யக.உப.4-3-22)

ஸுஷுப்தி அவஸ்தையில் (ஆழ்ந்த உறக்கத்தில்) தந்தை தந்தை இல்லை. அன்னை அன்னையில்லை. உலகம் உலகம் இல்லை. தேவர்கள் தேவர்கள் இல்லை. வேதங்கள் வேதங்கள் இல்லை. அங்கு, திருடன் திருடன் இல்லை. கர்பத்தை அழித்தவன் கர்பத்தை அழித்தவன் இல்லை. சாண்டாலன் சாண்டாலன் இல்லை. புல்கஸன் புல்கஸன் இல்லை. பரிவ்ராஜகன் (ஸந்யாஸி) பரிவ்ராஜகன் இல்லை. வானப்ரஸ்தன் (தபஸ்வீ) வானப்ரஸ்தன் (தபஸ்வீ) இல்லை. புண்ணியத்தோடு ஸம்பந்தமில்லாதவன் ஆகின்றான். பாபத்தோடு ஸம்பந்தமில்லாதவன் ஆகின்றான். ஹ்ருதயத்திலிருக்கின்ற அனைத்து சோகங்களையும் கடந்தவனாகின்றான்.

अन्तःकरणवृत्तिश्च चितिच्छायैक्यमागता ।
वासना: कल्पयेत्स्वप्नेबोधेऽक्षैर्विषयान्बहिः ॥ 11 ॥
அந்த:கரணவ்ருத்திச்ச சிதிச்சாயைக்யமாகதா /
வாஸனா: கல்பயேத்ஸ்வப்னேபோதே(அ)க்ஷைர்
விஷயான்பஹி: ॥ 11 ॥

பதவுரை :-

अन्तःकरणवृत्तिः ***அந்த:கரண வ்ருத்தி:-*** *புத்தி வ்ருத்தியானது*
च चितिच्छाया ***ச சிதிச்சாயா-*** *சைதன்யத்தின் ப்ரதிபிம்பத்தோடு*
ऐक्यम् ***ஐக்யம்*** *- ஐக்கியத்தை*
आगता ***ஆகதா*** *- அடைந்து*
स्वप्ने ***ஸ்வப்னே*** *- ஸ்வப்னத்தில்*
वासनाः ***வாஸனா:*** *- வாஸனை ஸ்ருஷ்டியானது*
कल्पयेत् ***கல்பயேத்*** *- கல்பிக்கப்படுகின்றது.*
बोधे ***போதே*** *- விழிப்பு நிலையில்*
अक्षैः ***அக்ஷை:*** *- இந்த்ரியங்கள் மூலம்*
बहिः ***பஹி:*** *- வெளியிலுள்ள*
विषयान् ***விஷயான்*** *- விஷயங்கள்*
(कल्पयेत्) ***(கல்பயேத்)-*** *கல்பிக்கப்படுகின்றது.*

பொழிப்புரை:- புத்தி வ்ருத்தியானது சைதன்யத்தின் ப்ரதிபிம்பத் தோடு ஐக்கியத்தை அடைந்து ஸ்வப்னத்தில் வாஸனை ஸ்ருஷ்டி யானது கல்பிக்கப்படுகின்றது. விழிப்பு நிலையில் இந்த்ரியங்கள் மூலம் வெளியிலுள்ள விஷயங்கள் கல்பிக்கப்படுகின்றது- அறியப் படுகின்றது.

मनोऽहंकृत्युपादानं लिंगमेकं जडात्मकम् ।
अवस्थात्रयमन्वेति जायते म्रियते तथा ॥ 12 ॥
மனோ(அ)ஹம்க்ருத்யுபாதானம் லிம்கமேகம் ஜடாத்மகம் ।
அவஸ்தாத்ரயமன்வேதி ஜாயதே ம்ரியதே ததா ॥ 12 ॥

பதவுரை :-

अहंकृति	***அஹங்க்ருதி***	*- அஹங்காரமானது*
मनो	***மனோ***	*- மனதை*
उपादानं	***உபாதானம்***	*- க்ரஹணம் செய்து (சேர்த்து) கொண்டு*
जडात्मकम्	***ஜடாத்மகம்***	*- ஜட வடிவான*
एकं	***ஏகம்***	*- ஒரு*
लिंगम्	***லிங்கம்***	*- லிங்க சரீரம் இருக்கின்றது. (அதுவே)*
अवस्थात्रयम्	***அவஸ்தாத்ரயம்***	*- மூன்று அவஸ்தைகளை*
अन्वेति	***அன்வேதி***	*- அடைகின்றது.*
तथा	***ததா***	*- அதுபோலவே, அதுவே*
जायते	***ஜாயதே***	*- பிறக்கின்றது.*
म्रियते	***ம்ருயதே***	*- இறக்கின்றது.*

பொழிப்புரை:- *அஹங்காரமானது மனதை க்ரஹணம் செய்து (சேர்த்து) கொண்டு ஜட வடிவான ஒரு லிங்க சரீரமாக ஆகின்றது. (அதுவே) மூன்று அவஸ்தைகளை அடைகின்றது. அதுபோலவே, அதுவே பிறக்கின்றது. இறக்கின்றது.*

शक्तिद्वयं हि मायया विक्षेपावृतिरूपकम् ।
विक्षेपशक्तिर्लिंगादि ब्रह्माण्डांतं जगत्सृजेत् ॥ 13 ॥

சக்தித்வயம் ஹி விக்ஷேபாவ்ருதிரூபகம் ।
விக்ஷேபசக்திர்லிங்காதி ப்ரஹ்மாண்டாந்தம் ஜகத்ஸ்ருஜேத் ॥ 13 ॥

பதவுரை :-

विक्षेप	***விக்ஷேப***	*- விக்ஷேப சக்தி மற்றும்*
आवृतिरूपकम्	***ஆவ்ருதிரூபகம்***	*– ஆவரண சக்தி வடிவமாக*
शक्तिद्वयं	***சக்தித்வயம்***	*- இரு சக்திகள்*
मायया हि	***மாயயா ஹி***	*- மாயையினுடையதாகும்.*
विक्षेपशक्तिः	***விக்ஷேபசக்தி:-***	*விசேஷப சக்தியானது*
लिंगादि	***லிங்காதி***	*- லிங்க (ஸூக்ஷ்ம) தேஹம் முதல்*
ब्रह्माण्डांतं	***ப்ரஹ்மாண்டாந்தம்***	*– ப்ரஹ்மாண்டம் வரையிலான*
जगत्	***ஜகத்***	*- ஜகத்தை*
सृजेत्	***ஸ்ருஜேத்***	*- ஸ்ருஷ்டிக்கின்றது.*

பொழிப்புரை:- விக்ஷேப சக்தி மற்றும் ஆவரண சக்தி வடிவமாக இரு சக்திகள் மாயையினுடையதாகும். விசேஷப சக்தியானது லிங்க (ஸூக்ஷ்ம) தேஹம் முதல் ப்ரஹ்மாண்டம் வரையிலான ஜகத்தை ஸ்ருஷ்டிக்கின்றது.

सृष्टिर्नाम ब्रह्मरूपे सच्चिदानन्दवस्तुनि ।
अब्धौ फेनादिवत्सर्वनामरूपप्रसारणा ।। 14 ।।
ஸ்ருஷ்டிர்நாம ப்ரஹ்மரூபே ஸச்சிதானந்தவஸ்துனி।
அப்தௌ பேனாதிவத்ஸர்வநாமரூபப்ரஸாரணா।। 14 ।।

பதவுரை:-

सृष्टिर्नाम	***ஸ்ருஷ்டிர்நாம-*** *ஸ்ருஷ்டி என்பது,*
सच्चिदानन्द	***ஸச்சிதாநந்த -*** *ஸத்-சித்-ஆனந்த*
वस्तुनि	***வஸ்துனி*** *- வஸ்துவாகிய*
ब्रह्मरूपे	***ப்ரஹ்மரூபே-*** *ப்ரஹ்மத்தில்*
अब्धौ	***அப்தௌ*** *- கடல் நீரிலில்*
फेनादिवत्	***பேனாதிவத்*** *- நுரை முதலானவை உண்டாவது போல*
सर्वनामरूप	***ஸர்வநாமரூப-*** *அனைத்து நாம-ரூபங்களும்*
प्रसारणा	***ப்ரஸாரணா*** *- நன்கு விரிந்து கல்பிக்கப்படுகின்றது.*

பொழிப்புரை:- *ஸ்ருஷ்டி என்பது, ஸத்-சித்-ஆனந்த வஸ்துவாகிய ப்ரஹ்மத்தில் கடல் நீரிலில் நுரை முதலானவை உண்டாவது போல அனைத்து நாம-ரூபங்களும் நன்கு விரிந்து கல்பிக்கப்படுகின்றது.*

अन्तर्दृग्दृश्ययोर्भेदं बहिश्च ब्रह्मसर्गयोः ।
आवृणोत्यपरा शक्तिस्सा संसारस्य कारणम् ।। 15 ।।
அந்தர்-த்ருக்-த்ருச்யயோர்-பேதம் பஹிச்ச ப்ரஹ்ம-ஸர்கயோ: ।
ஆவ்ருணோத்யபரா சக்திஸ்ஸா ஸம்ஸாரஸ்ய காரணம் ।। 15 ।।

<u>பதவுரை:-</u>

अन्तः *அந்த:* - உள்ளே
दृग्दृश्ययोः ***த்ருக்-த்ருச்யயோ:*** - பார்ப்பவன்-பார்க்கப்படுபவைகளுக்கு
भेदं ***பேதம்*** - (இடையில் உள்ள) பேதத்தையும்,
बहिः च ***பஹி: ச*** - மேலும், வெளியில்
ब्रह्मसर्गयोः ***ப்ரஹ்மஸர்கயோ:*** - ப்ரஹ்மம்-ஸ்ருஷ்டிகளுக்கு உள்ள பேதத்தையும்
अपरा ***அபரா*** - மற்றொரு (ஆவரண)
शक्तिः ***சக்தி:*** - சக்தியானது
आवृणोति ***ஆவ்ருணோதி*** - மூடி மறைக்கின்றது
सा ***ஸா*** - அதுவே
संसारस्य ***ஸம்ஸாரஸ்ய*** - ஸம்ஸாரத்திற்கு
कारणम् ***காரணம்*** - காரணமாகும்.

<u>பொழிப்புரை</u>:- (தேஹத்திற்கு) உள்ளே பார்ப்பவன்-பார்க்கப்படுபவைகளுக்கு (இடையில் உள்ள) பேதத்தையும், மேலும், வெளியில் ப்ரஹ்மம் மற்றும் ஸ்ருஷ்டிகளுக்கு இடையில் உள்ள பேதத்தையும் மற்றொரு (ஆவரண) சக்தியானது மூடி மறைக்கின்றது. அதுவே ஸம்ஸாரத்திற்கு காரணமாகும்.

साक्षिण: पुरतो भाति लिंगं देहेन संयुतम् ।
चितिच्छाया समावेशाज्जीवस्स्याद्व्यावहारिक: ।। 16 ।।
ஸாக்ஷிண: புரதோ பாதி லிங்கம் தேஹேன ஸம்யுதம் ।
சிதிச்சாயா ஸமாவேசாஜ்ஜீவஸ்ஸ்யாத்வ்யாவஹாரிக: ।। 16 ।।

<u>பதவுரை</u> :-

साक्षिण:	***ஸாக்ஷிண:***	*- ஸாக்ஷியானது*
लिंगं	***லிங்கம்***	*- ஸூக்ஷ்ம*
देहेन	***தேஹேன***	*- தேஹத்தோடு*
संयुतम्	***ஸம்யுதம்***	*- கூடினதாக*
चितिच्छाया	***சிதிச்சாயா***	*- சைதன்யத்தின் ப்ரதிபிம்பம்*
समावेशात्	***ஸமாவேசாத்***	*- நன்கு ப்ரவேசித்ததாக*
पुरतो	***புரதோ***	*- வெளியில்*
भाति	***பாதி***	*- ப்ரகாசிக்கின்றது.*
व्यावहारिक:	***வ்யாவஹாரிக:***	*- (இதுவே) வ்யவஹாரத்தில்*
जीव:	***ஜீவ:***	*- ஜீவனாக*
स्याद्	***ஸ்யாத்***	*- ஆகின்றது.*

<u>பொழிப்புரை</u>:- ஸாக்ஷியானது (ப்ரஹ்மமானது) ஸூக்ஷ்ம தேஹத்தோடு கூடினதாக, (அல்லது) ஸாக்ஷியயை ஆதாரமாகக் கொண்டு ஸூக்ஷ்ம தேஹத்தோடு கூடினதாக, சைதன்யத்தின் ப்ரதிபிம்பம் நன்கு ப்ரவேசித்ததாக வெளியில் ப்ரகாசிக்கின்றது. (இதுவே) வ்யவஹாரத்தில் ஜீவனாக ஆகின்றது.

अस्य जीवत्वमारोपात्साक्षिण्यप्यवभासते ।
आवृतौ तु विनष्टायां भेदे भातेऽपयाति तत् ।। 17 ।।
அஸ்ய ஜீவத்வமாரோபாத்ஸாக்ஷிண்யப்யவபாஸதே ।
ஆவ்ருதௌ வினஷ்டாயாம் பேதே பாதே(அ)பயாதி தத் ।। 17 ।।

பதவுரை :-

अस्य ***அஸ்ய*** *- இந்த*
जीवत्वम् ***ஜீவத்வம்*** *- ஜீவத்தன்மையானது*
आरोपात् ***ஆரோபாத்*** *- ஆரோபம் செய்யப்படுவதால்*
साक्षिणि अपि ***ஸாக்ஷிணி அபி-*** *ஸாக்ஷியிலும் கூட*
अवभासते ***அவபாஸதே -*** *ஆபாஸிக்கின்றது.*
आवृतौ तु ***ஆவ்ருதௌ து-*** *ஆனால், ஆவரணம்(அவித்யா மறைப்பு)*
विनष्टायां ***வினஷ்டாயாம்*** *– நாசமாகின்ற நிலையில்*
भेदे ***பேதே*** *- பேதமானது*
भाते ***பாதே*** *- தெளிவாக ப்ரகாசிப்பதால்*
तत् ***தத்*** *- அந்த ஜீவத்தன்மையானது*
अपयाति ***அபயாதி*** *- நிவ்ருத்தி அடைகின்றது.*

பொழிப்புரை:- *இந்த ஜீவத்தன்மையானது ஆரோபம் செய்யப் படுவதால் ஸாக்ஷியிலும் கூட ஆபாஸிக்கின்றது. ஆனால், ஆவரணமாகிய அவித்யா மறைப்பு நாசமாகின்ற நிலையில் (த்ரஷ்டா-த்ருஷ்யம் என்ற) பேதமானது தெளிவாக ப்ரகாசிப்பதால் அந்த ஜீவத்தன்மையானது நிவ்ருத்தி அடைகின்றது.*

तथा सर्गब्रह्मणोश्च भेदमावृत्य तिष्ठति ।
या शक्तिस्तद्वशाद्ब्रह्म विकृतत्वेन भासते ।। 18 ।।
ததா ஸர்கப்ரஹ்மணோச்ச பேதமாவ்ருத்ய திஷ்டதி ।
***யா சக்திஸ்தத்வசாத்ப்ரஹ்ம விக்ருதத்வேன பாஸதே* ।। 18 ।।**

பதவுரை:-

तथा च ***ததா ச*** *- அதுபோலவே, மேலும்*
या ***யா*** *- எந்த*
शक्तिः ***சக்தி:*** *- சக்தியானது உள்ளதோ அதுவே*
सर्ग-ब्रह्मणोः ***ஸர்க-ப்ரஹ்மணோ:-*** *ஸ்ருஷ்டி மற்றும் ப்ரஹ்மத்திற்கும்*
भेदम् **பேதம்** *- (உள்ள) பேதத்தை*
आवृत्य ***ஆவ்ருத்ய*** *- மூடி மறைத்து கொண்டு*
तिष्ठति ***திஷ்டதி*** *- நிற்கின்றது.*
तद्वशाद् ***தத்வசாத்*** *- அதன் வசத்தினாலேயே*
ब्रह्म ***ப்ரஹ்ம*** *- ப்ரஹ்மமானது*
विकृतत्वेन ***விக்ருதத்வேன-*** *பல்வேறு வடிவங்களாக*
भासते ***பாஸதே*** *- ப்ரகாசிக்கின்றது-தோன்றுகின்றது.*

பொழிப்புரை:- அதுபோலவே, மேலும் எந்த சக்தியானது உள்ளதோ அதுவே ஸ்ருஷ்டி மற்றும் ப்ரஹ்மத்திற்கும் (உள்ள) பேதத்தை மூடி மறைத்து கொண்டு நிற்கின்றது. அதன் வசத்தினாலேயே ப்ரஹ்ம மானது பல்வேறு வடிவங்களாக ப்ரகாசிக்கின்றது-தோன்றுகின்றது.

अत्राप्यावृतिनाशेन विभाति ब्रह्मसर्गयो: ।
भेदस्तयोर्विकारस्स्यात्सर्गे न ब्रह्मणि कचित् ।। 19 ।।
அத்ராப்யாவ்ருதிநாசேன விபாதி ப்ரஹ்மஸர்கயோ: ।
பேதஸ்தயோர்விகாரஸ்ஸ்யாத்ஸர்கே ந ப்ரஹ்மணி கசித் ।। 19 ।।

பதவுரை :-

अत्र अपि	***அத்ர அபி***	*- இங்கும் கூட,*
आवृति	***ஆவ்ருதி***	*- மறைப்பானது*
नाशेन	***நாசேன***	*- நாசமான நிலையில்,*
ब्रह्म-सर्गयो:	***ப்ரஹ்ம-ஸர்கயோ:***	*- ப்ரஹ்மம் மற்றும் ஸ்ருஷ்டிக்கு*
भेद:	***பேத:***	*- (இடையிலுள்ள) பேதமானது*
विभाति	***விபாதி***	*- நன்கு விளங்குகின்றது.*
तयो:	***தயோ:***	*- அவைகளுடைய*
विकार:	***விகார:***	*- விகாரங்கள்*
सर्गे	***ஸர்கே***	*- ஸ்ருஷ்டியிலேயே*
स्यात्	***ஸ்யாத்***	*- இருக்கின்றது.*
ब्रह्मणि	***ப்ரஹ்மணி***	*- ப்ரஹ்மத்தில்*
न कचित्	***கசித்***	*- கொஞ்சமும் பேதம் இல்லை.*

பொழிப்புரை:- இங்கும் கூட, மறைப்பானது நாசமான நிலையில், ப்ரஹ்மம் மற்றும் ஸ்ருஷ்டிக்கு (இடையிலுள்ள) பேதமானது நன்கு விளங்குகின்றது. அவைகளுடைய விகாரங்கள் ஸ்ருஷ்டியிலேயே இருக்கின்றது. ப்ரஹ்மத்தில்கொஞ்சமும் பேதம் இல்லை.

अस्ति भाति प्रियं रूपं नाम- चेत्यंश पञ्चकम् ।
आद्यत्रयं ब्रह्मरूपं जगद्रूपं ततो द्वयम् ।। 20 ।।
அஸ்தி பாதி ப்ரியம் சேதி நாம- ரூபம் ச பஞ்சகம் ।
ஆத்யத்ரயம் ப்ரஹ்மரூபம் ஜகத்ரூபம் த்வயஸ்ததா ।। 20 ।।

<u>பதவுரை:-</u>

अस्ति ***அஸ்தி*** - *தூய இருப்பு (pure excisteness)*

भाति ***பாதி*** - *தூய உணர்வு (pure consciousness)*

प्रियं ***ப்ரியம்*** - *தூய ஆனந்தம் ((pure bliss)*

नाम ***நாம*** - *நாமம் (பெயர்)*

रूपं ***ரூபம்*** - *வடிவம்*

चेति ***ச-இதி*** - *என்ற இவை*

अंश पञ्चकम् ***பஞ்சகம் -*** *பஞ்சகம் என்ற ஐந்து அம்சங்களாகும்.*

आद्यत्रयं ***ஆத்யத்ரயம் -*** *முதல் மூன்று*

ब्रह्मरूपं ***ப்ரஹ்மரூபம்-*** *ப்ரஹ்ம வடிவாகும்.*

ततो ***ததோ*** - *பிறகுள்ள*

द्वयम् ***த்வயம்*** - *இரண்டும்*

जगद्रूपं ***ஜகத்*** - *ஜகத் வடிவாகும்.*

<u>பொழிப்புரை:-</u> *தூய இருப்பு (pure excisteness), தூய உணர்வு (pure consciousness), தூய ஆனந்தம் ((pure bliss), நாமம்(பெயர்), ரூபம் (வடிவம்), என்ற இவை அம்சபஞ்சகம் என்ற ஐந்து அம்சங்களாகும். முதல் மூன்று ப்ரஹ்ம வடிவாகும். பிறகுள்ள இரண்டும் ஜகத் வடிவாகும்.*

अस्ति भाति प्रियं चेति नाम- रूपं च पञ्चकम् ।
आद्यत्रयं ब्रह्मरूपं जगद्रूपं द्वयस्तथा ।। 20 ।।
அஸ்தி பாதி ப்ரியம் சேதி நாம- ரூபம் ச பஞ்சகம் ।
ஆத்யத்ரயம் ப்ரஹ்மரூபம் ஜகத்ரூபம் த்வயஸ்ததா ।।

खवाय्वग्निजलोर्वीषु देवतिर्यङ्नरादिषु ।
अभिन्नास्सच्चिदानन्दा: भिद्येते रूपनामनी ।। 21 ।।
கவாய்வக்னிஜலோர்வீஷு தேவதிர்யங்நராதிஷு ।
அபின்னாஸ்ஸச்சிதாநந்தா: பித்யேதே ரூபநாமனீ ।। 21 ।।

<u>பதவுரை:-</u>

ख	***க***	*- ஆகாசம்*
वायु:	***வாயு:***	*- வாயு*
अग्नि:	***அக்னி:***	*- அக்னி*
जलो:	***ஜலோ:***	*- தண்ணீர்*
उर्वीषु	***உர்வீஷு***	*- பூமி இவைகளில்*
देव-तिर्यङ्	***தேவ-திர்யங்***	*- தேவர்கள்-விலங்குகள்*
नरादिषु	***நராதிஷு***	*- மனிதர்களில்*
अभिन्ना:	***அபின்னா:***	*- வேறுபடாமல்*
सच्चिदानन्दा:	***ஸச்சிதாநந்தா:***	*- ஸத்-சித்-ஆனந்தங்கள் உள்ளது.*
रूपनामनी	***ரூபநாமனீ***	*- நாம-ரூபங்கள்*
भिद्येते	***பித்யேதே***	*- வேறுபடுகின்றன.*

<u>பொழிப்புரை:-</u> *ஆகாசம், வாயு, அக்னி, தண்ணீர், பூமி இவைகளில் தேவர்கள்-விலங்குகள் மற்றும் மனிதர்களில் வேறுபடாமல் ஸத்-சித்-ஆனந்தங்கள் (ப்ரஹ்ம தத்துவம்) உள்ளது. நாம-ரூபங்கள் வேறுபடுகின்றன.*

उपेक्ष्य नामरूपे द्वे सच्चिदानन्दतत्परः ।
समाधिं सर्वदा कुर्याधृदये वाऽथवा बहिः ।। 22 ।।
உபேக்ஷ்ய நாமரூபே த்வே ஸச்சிதாநந்ததத்பர: ।
ஸமாதிம் ஸர்வதா குர்யாத்ருதயே வா(அ)தவா பஹி: ।। 22 ।।

பதவுரை:-

नामरूपे द्वे	***நாமரூபே த்வே-***	*நாம-ரூபம் இரண்டையும்*
उपेक्ष्य	***உபேக்ஷ்ய***	*- ஒதுக்கித்தள்ளி விட்டு*
सच्चिदानन्द	***ஸச்சிதாநந்த***	*- ஸச்சிதானந்தத்தை*
तत्परः	***தத் பர:***	*- மேலான லக்ஷியமாகக் கொண்டு*
सर्वदा	***ஸர்வதா***	*- எல்லாக் காலங்களிலும்*
हृदये	***ஹ்ருதயே***	*- ஹ்ருதயத்திலோ*
वा अथवा	***வா அதவா***	*- அல்லது*
बहिः	***பஹி:***	*- வெளியிலோ*
समाधिं	***ஸமாதிம்***	*- ஸமாதியை*
कुर्याद्	***குர்யாத்***	*- செய்வாயாக!*

பொழிப்புரை:- நாம-ரூபம் இரண்டையும் ஒதுக்கித்தள்ளி விட்டு ஸச்சிதானந்தத்தை மேலான லக்ஷியமாகக் கொண்டு எல்லாக் காலங்களிலும் ஹ்ருதயத்திலோ அல்லது வெளியிலோ ஸமாதியை செய்வாயாக!

सविकल्पो निर्विकल्पः समाधिर्द्विविधो हृदि ।
दृश्यशब्दानुवेधेन सविकल्पः पुनर्द्विधा ।। 23 ।।
ஸவிகல்போ நிர்விகல்ப: ஸமாதிர்த்விவிதோ ஹ்ருதி ।
த்ருஸ்யசப்தானுவேதேன ஸவிகல்ப: புனர்த்விதா ।। 23 ।।

<u>பதவுரை:-</u>

हृदि	***ஹ்ருதி***	*- ஹ்ருதயத்தில் உண்டாகும்*
समाधिः	***ஸமாதி:***	*- ஸமாதியானது*
सविकल्पो	***ஸவிகல்போ***	*- ஸவிகல்பம்*
निर्विकल्पः	***நிர்விகல்ப:***	*- நிர்விகல்பம் என்று*
द्विविधो	***த்விவிதோ***	*- இரு விதங்களாகும்.*
दृश्य	***த்ருச்யம்***	*- காட்சி மற்றும்*
शब्द	***சப்த***	*- சப்தம் (ஓசை) என்றவைகளின்*
अनुबोधेन	***அநுபோதேன-***	*தொடர் அறிவினால்*
सविकल्पः	***ஸவிகல்ப:***	*- ஸவிகல்பமானது*
पुनः	***புன:***	*- மீண்டும்*
द्विधा	***த்விதா***	*- இரு விதங்களாகும்.*

<u>பொழிப்புரை:-</u> ஹ்ருதயத்தில் உண்டாகும் ஸமாதியானது ஸவிகல்பம் நிர்விகல்பம் என்று இரு விதங்களாகும். காட்சி (ரூப ஸம்பந்தம்) மற்றும் சப்தம் (ஓசையோடு ஸம்பந்தம்) என்றவைகளின் தொடர் அறிவினால் ஸவிகல்பமானது மீண்டும் இரு விதங்களாகும்.

ஸமாதி

1.ஸவிகல்பம் ----- ***2.நிர்விகல்பம்***

1.ரூப ஸம்பந்தம் 2.சப்த ஸம்பந்தம்

कामाद्याश्चित्तगा दृश्यास्तत्साक्षित्वेन चेतनम् ।
ध्यायेद्दृश्यानुविद्धोऽयं समाधिस्सविकल्पकः ॥ 24 ॥
காமாத்யாச்சித்தகா த்ருச்யாஸ்தத்ஸாக்ஷித்வேன சேதனம் ।
த்யாயேத்த்ருச்யானுவித்தோ(அ)யம் ஸமாதிஸ்ஸவிகல்பக: ॥ 24 ॥

பதவுரை :-

कामाद्या: ***காமாதி*** *- காமம்(ஆசை) முதலான*

आचित्तगा: ***ஆசித்தகா:*** *- சித்தத்தில் உண்டாகும் வ்ருத்திகள்*

दृश्या: ***த்ருச்யா:*** *- த்ருச்யங்கள் ஆகும்.*

तत्साक्षित्वेन ***தத்ஸாக்ஷித்வேன-****அவற்றை ஸாக்ஷி தன்மையில் இருந்து*

चेतनम् ***சேதனம்*** *- சைதன்யத்தை (pure consciousness)*

ध्यायेद् ***த்யாயேத்*** *- தியானம் செய்யட்டும்.*

अयं ***அயம்*** *- இந்த விதமான*

समाधि: ***ஸமாதி:*** *- ஸமாதி*

दृश्य ***த்ருச்ய*** *- த்ருச்யத்தோடு*

अनुविद्धो ***அநுவித்தோ*** *- ஸம்பந்தத்தை உடைய*

सविकल्पक: ***ஸவிகல்ப:*** *- ஸவிகல்ப*

समाधि: ***ஸமாதி:*** *- ஸமாதியாகும்.*

பொழிப்புரை:- *காமம்(ஆசை) முதலான சித்தத்தில் உண்டாகும் வ்ருத்திகள் த்ருச்யங்கள் ஆகும். அவற்றை ஸாக்ஷி தன்மையில் இருந்து சைதன்யத்தை(pure consciousness) தியானம் செய்யட்டும். இந்த விதமான ஸமாதி, த்ருச்யத்தோடு ஸம்பந்தத்தை உடைய (த்ருச் யானுவித்த ஸமாதி) ஸவிகல்ப ஸமாதியாகும்.*

असंगस्सच्चिदानन्दस्स्वप्रभो द्वैतवर्जितः ।
अस्मीति शब्दविद्धोऽयं समाधिस्सविकल्पः ।। 25 ।।
அஸம்கஸ்ஸச்சிதாநந்தஸ்ஸ்வப்ரபோ த்வைதவர்ஜித: ।
அஸ்மீதி சப்தவித்தோ(அ)யம் ஸமாதிஸ்ஸவிகல்ப: ।। 25 ।।

பதவுரை :-

असंग ***அஸங்க*** - *'அஸங்கமானது'*
सच्चिदानन्दः ***ஸச்சிதாநந்த:-*** *'ஸச்சிதானந்தம்'*
स्वप्रभो ***ஸ்வப்ரபோ*** - *'ஸ்வயம் ப்ரகாசம்'*
द्वैतवर्जितः ***த்வைதவர்ஜித:*** - *'த்வைதம் இல்லாதது'*
अस्मीति ***அஸ்மீதி*** - *ப்ரஹ்மமாக நான் இருக்கின்றேன் என்ற*
अयं ***அயம்*** - *இவ்விதமான ஸமாதி*
शब्द-विद्धो ***சப்தவித்தோ*** - *சப்த அனுவித்த (ஸம்பந்தத்தை உடைய)*
सविकल्पः ***ஸவிகல்ப:*** - *ஸவிகல்ப*
समाधिः ***ஸமாதி:*** - *ஸமாதியாகும்.*

பொழிப்புரை:- 'அஸங்கமானது'-'ஸச்சிதானந்தம்'-'ஸ்வயம் ப்ரகாசம்' -'த்வைதம் இல்லாதது' என்ற லக்ஷணங்களை உடைய ப்ரஹ்மமாக நான் இருக்கின்றேன் என்ற இவ்விதமான சப்தங்களை (ச்ருதி வாக்கியங்களை தியானிப்பதன் மூலம் உண்டாகும் ஸமாதி சப்தானுவித்த (சப்த ஸம்பந்தத்தை உடைய) ஸவிகல்ப ஸமாதியாகும்

நிர்விகல்ப ஸமாதி

स्वानुभूतिरसावेशाद् दृश्यशब्दावुपेक्ष्यतु ।
निर्विकल्पस्समाधिस्स्यान्निवातास्थितदीपवत् ।। 26 ।।
ஸ்வானுபூதிரஸாவேசாத் த்ருச்யசப்தாவுபேக்ஷ்யது ।
நிர்விகல்பஸ்ஸமாதிஸ்ஸ்யான்நிவாதாஸ்திததீபவத் ।। 26 ।।

பதவுரை :-

दृश्यशब्दौ	***த்ருச்யசப்தௌ***	*- த்ருச்யம் (காட்சி) மற்றும் சப்தங்களை*
उपेक्ष्य तु	***உபேக்ஷ்ய து***	*- உதாசீனப்படுத்திவிட்டு,*
स्वानुभूति	***ஸ்வானுபூதி***	*- ஸ்வானுபவம் என்ற*
रस	***ரஸ***	*- ரஸத்தில்*
आवेशाद्	***ஆவேசாத்***	*- ப்ரவேசம் செய்த காரணத்தால்*
निवातास्थित	***நிவாதாஸ்தித***	*- காற்றில்லா இடத்தில் இருக்கின்ற*
दीपवत्	***தீபவத்***	*- தீபத்தைப் போன்று (சித்தம் அசைவற்ற)*
निर्विकल्पः	***நிர்விகல்ப:***	*- நிர்விகல்பக*
समाधिः	***ஸமாதி:***	*- ஸமாதி*
स्यात्	***ஸ்யாத்***	*- உண்டாகின்றது.*

பொழிப்புரை:- *த்ருச்யம் (காட்சி) மற்றும் சப்தங்களை உதாசீனப் படுத்திவிட்டு, ஸ்வானுபவம் என்ற ரஸத்தில் ப்ரவேசம் செய்த காரணத்தால் சித்தமானது, காற்றில்லா இடத்தில் இருக்கின்ற தீபத்தைப்போன்று (அசைவற்றதான) நிர்விகல்பக ஸமாதி உண்டாகின்றது.*

हृदीव बाह्यदेशेऽपि यस्मिन्कस्मिंश्च वस्तुनि ।
समाधिराद्यस्सन्मात्रान्नामरूपपृथक्कृतिः ॥ 27 ॥
ஹ்ருதீவ பாஹ்யதேசே(அ)பி யஸ்மின்கஸ்மிம்ச்ச வஸ்துனி ।
ஸமாதிராத்யஸ்ஸன்மாத்ரான்நாமரூபப்ருதக்க்ருதி: ॥ 27 ॥

__பதவுரை:-__

हृदीव ***ஹ்ருதி-இவ*** - *ஹ்ருதயத்தில் உண்டாவது போல,*
बाह्यदेशे अपि ***பாஹ்யதேசே அபி-*** *வெளி இடங்களிலும் கூட*
यस्मिन् कस्मिन् च ***யஸ்மின் கஸ்மின் ச -*** *ஏதாவது ஒரு*
वस्तुनि ***வஸ்துனி*** - *வஸ்துவில்*
आद्यः ***ஆத்ய: -*** *முதலாவதான (ஸவிகல்ப)*
समाधिः ***ஸமாதி:*** - *ஸமாதி உண்டாகின்றது. (பிறகு)*
नामरूप ***நாமரூப*** - *நாம-ரூபங்களை*
पृथक् कृतिः ***ப்ருதக் க்ருதி:-*** *தனியாக பிரித்துவிட்டு*
सन्मात्रात् ***ஸன்மாத்ராத் -*** *ஸத் (வெறும் இருப்பு) மாத்திரமாய்*
(द्वितीयः ***த்விதீய:)*** - *இரண்டாவதான (நிர்விகல்ப)*
(समाधिः ***ஸமாதி:)*** - *ஸமாதி உண்டாகின்றது.*

__பொழிப்புரை:-__ ஹ்ருதயத்தில் உண்டாவது போல, வெளி இடங்களிலும் கூட ஏதாவது ஒரு வஸ்துவில் முதலாவதான (ஸவிகல்ப) ஸமாதி உண்டாகின்றது. (பிறகு) நாம-ரூபங்களை தனியாக பிரித்துவிட்டு ஸத் (வெறும் இருப்பு) மாத்திரமாய் இரண்டாவதான (நிர்விகல்ப) ஸமாதி உண்டாகின்றது.

अखंडैकरसं वस्तु सच्चिदानन्दलक्षणम् ।
इत्यविच्छिन्नचिंतेयं समाधिर्मध्यमो भवेत् ॥ 28 ॥
அகண்டைகரஸம் வஸ்து ஸச்சிதாநந்தலக்ஷணம் ।
இத்யவிச்சின்னசிந்தேயம் ஸமாதிர்மத்யமோ பவேத் ॥ 28 ॥

<u>பதவுரை:-</u>

अखंड	***அகண்ட***	- *அகண்டமான (பிளவுபடாத)*
एकरसं	***ஏகரஸம்***	- *ஏக ரஸமான*
वस्तु	***வஸ்து***	- *வஸ்து(பொருள்)*
सच्चिदानन्द	***ஸச்சிதாநந்த***	- *ஸத்-சித்-ஆனந்த*
लक्षणम्	***லக்ஷணம்***	- *லக்ஷணத்தை உடையது*
इति	***இதி***	- *என்ற*
अविच्छिन्न	***அவிச்சின்ன***	- *பிளவுபடாத*
चिंतेयं	***சிந்தா-இயம்***	- *இந்த சிந்தனையானது*
मध्यमो	***மத்யமோ***	- *மத்யம*
समाधिः	***ஸமாதி:***	- *ஸமாதி*
भवेत्	***பவேத்***	- *ஆகும்.*

<u>பொழிப்புரை:-</u> *அகண்டமான (பிளவுபடாத) ஏக ரஸமான வஸ்து (பொருள்) ஸத்-சித்-ஆனந்த லக்ஷணத்தை உடையது என்ற பிளவுபடாத இந்த சிந்தனையானது மத்யம ஸமாதி ஆகும்.*

स्तब्धीभावो रसास्वादात्तृतीयः पूर्ववन्मतः ।
एतैस्समाधिभिष्षड्भिर्नयेत्कालं निरन्तरम् ॥ 29 ॥
ஸ்தப்தீபாவோ ரஸாஸ்வாதாத்த்ருதீய: பூர்வவன்மத: ।
ஏதைஸ்ஸமாதிபிஷ்ஷட்பிநயேத்காலம் நிரந்தரம் ॥ 29 ॥

<u>பதவுரை:-</u>

रसास्वादात्	***ரஸாஸ்வாதாத்-***	*ஆத்மானுபவ ரஸாஸ்வாதத்தினால்*
स्तब्धी-भावो	***ஸ்தப்தீ- பாவோ-***	*(உண்டாகும்) ஸ்தப்த அவஸ்தை,*
तृतीयः	***த்ருதீய:***	*- மூன்றாவதான ஸமாதியாகும்.*
पूर्ववन्मतः	***பூர்வவத்-மத:-***	*முன்போன்ற மதமாகும்.*
एतैः	***ஏதை:***	*- இந்த*
षड्भिःसमाधिभिः	***ஷட்பி:ஸமாதிபி:-***	*ஆறு ஸமாதிகளால்*
निरन्तरम्	***நிரந்தரம்***	*- நிரந்தரமாக*
कालं	***காலம்***	*- காலத்தை*
नयेत्	***நயேத்***	*- கடத்துவாயாக!*

<u>பொழிப்புரை:</u>-ஆத்மானுபவ ரஸாஸ்வாதத்தினால் (உண்டாகும்) ஸ்தப்த அவஸ்தை, மூன்றாவதான ஸமாதியாகும். முன்போன்ற மதமாகும். இந்த ஆறு ஸமாதிகளால் நிரந்தரமாக காலத்தை கடத்துவாயாக!

ஹ்ருதயத்தில் உண்டாகும் மூன்று ஸமாதிகள்

1.த்ருச்யானுவித்த ஸமாதி (ஸவிகல்பம்)
2.சப்தானுவித்த ஸமாதி (ஸவிகல்பம்)
3.நிர்விகல்ப ஸமாதி

வெளியில் உண்டாகும் மூன்று ஸமாதிகள்

1.த்ருச்யானுவித்த ஸமாதி (ஸவிகல்பம்)
2.சப்தானுவித்த ஸமாதி (ஸவிகல்பம்)
3.நிர்விகல்ப ஸமாதி

இவ்விதம் ஸமாதிகள் ஆறுவிதம் ஆகும்.

देहाभिमाने गलिते विज्ञाते परमात्मनि ।
यत्र यत्र मनो याति तत्र तत्र समाधय: ।। 30 ।।
தேஹாபிமானே கலிதே விக்ஞாதே பரமாத்மனி।
யத்ர யத்ர மனோ யாதி தத்ர தத்ர ஸமாதய: ।। 30 ।।

பதவுரை:-

देहाभिमाने	***தேஹாபிமானே-*** *தேஹ அபிமானம்*	
गलिते	***கலிதே***	*- நாசமான நிலையில்*
परमात्मनि	***பரமாத்மனி***	*- பரமாத்மாவே நான் என்று*
विज्ञाते	***விக்ஞாதே***	*- அனுபூதி உண்டான நிலையில்*
यत्र यत्र	***யத்ர யத்ர***	*- எங்கு-எங்கு*
मनो	***மனோ***	*- மனதானது*
याति	***யாதி***	*- செல்கின்றதோ*
तत्र तत्र	***தத்ர தத்ர***	*- அங்கு-அங்கு*
समाधय:	***ஸமாதய:***	*- ஸமாதி ஆகின்றது.*

பொழிப்புரை:-*தேஹ அபிமானம் நாசமான நிலையில் - பரமாத்மாவே நான் என்று அனுபூதி உண்டான நிலையில் எங்கு-எங்கு மனதானது செல்கின்றதோ, அங்கு-அங்கு ஸமாதி ஆகின்றது.*

ஆத்மஞானத்தின் பலன்

भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥ 31 ॥
பித்யதே ஹ்ருதயக்ரந்திஸ்சித்யந்தே ஸர்வஸம்சயா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந்த்ருஷ்டே பராவரே ॥ 31 ॥

__பதார்த்தம்__

तस्मिन्	***தஸ்மின்***	- *அந்த*
परावरे	***பராவரே***	- *பரமாத்மாவை*
दृष्टे	***த்ருஷ்டே***	- *ஸாக்ஷாத்காரம் செய்த நிலையில்*
अस्य	***அஸ்ய***	- *இவனுடைய*
हृदयग्रन्थिः	***ஹ்ருதயக்ரந்தி:***	- *ஹ்ருதய முடிச்சுக்கள்*
भिद्यते	***பித்யதே***	-*துண்டுபடுகின்றன- அவிழ்ந்து போகின்றன.*
सर्वसंशयाः	***ஸர்வஸம்சயா:***	- *அனைத்து சந்தேகங்களும்*
छिद्यन्ते	***சித்யந்தே***	- *வெட்டுப்படுகின்றன.*
च अस्य	***ச அஸ்ய***	- *மேலும் அவனுடைய*
कर्माणि	***கர்மாணி***	- *கர்மங்கள் அனைத்தும்*
क्षीयन्ते	***க்ஷீயந்தே***	- *நாசமாகின்றன.*

__பொழிப்புரை:__ அந்த காரண-காரிய ரூபமான பராவரத்தை –ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்காரம் செய்த நிலையில், இந்த முமுக்ஷு வினுடைய ஹ்ருதயத்தில் உள்ள க்ரந்திகள்-அக்ஞான முடிச்சுக்கள் அனைத்தும் அவிழ்ந்து போகின்றன- துண்டாகின்றன. அனைத்து சந்தேகங்களும் வெட்டுப்பட்டு இல்லாமல் போகின்றன. மேலும் அவனுடைய ஸஞ்சிதம், ஆகாமி, ப்ராரப்தம் என்ற அனைத்து கர்மங்களும் நாசமாகின்றன.

अवच्छिन्नश्चिदाभासस्तृतीयः स्वप्नकल्पितः ।
विज्ञेयस्त्रिविधोजीवस्तत्राद्यः पारमार्थिकः ।। 32 ।।
அவச்சின்னச்சிதாபாஸஸ்த்ருதீய: ஸ்வப்னகல்பித: **।**
விக்ஞேயஸ்த்ரிவிதோஜீவஸ்தத்ராத்ய: பாரமார்த்திக: **।। 32 ।।**

<u>பதவுரை</u>:-

त्रिविधो ***த்ரிவிதோ*** *- மூன்றுவிதமான*

जीवः ***ஜீவ:*** *- ஜீவர்கள்*

विज्ञेय ***விக்ஞேய*** *- அறியதக்கதாகும்.*

अवच्छिन्नः ***அவச்சின்ன:*** *- பகுக்கப்பட்டது, (முதலாவது)*

(द्वितीयः) ***(த்விதீய:)*** *- (இரண்டாவது)*

चिदाभासः ***சிதாபாஸ:*** *- சைதன்யத்தின் ப்ரதிபிம்பம்,*

तृतीयः ***த்ருதீய:*** *- மூன்றாவது,*

स्वप्न कल्पितः ***ஸ்வப்ன கல்பித:-*** *ஸ்வப்னத்தில் கல்பிக்கப்பட்டது*

तत्र आद्यः ***தத்ர ஆத்ய:*** *- அவற்றில் முதலாவது*

पारमार्थिकः ***பாரமார்த்திக:-*** *(அதுவே) பரமார்த்திகமாகும்.*

<u>பொழிப்புரை</u>:- *மூன்று விதமான ஜீவர்கள் அறியதக்கதாகும். அவ்விஷயத்தில் முதலாவது பகுக்கப்பட்டதாகும், இரண்டாவது சைதன்யத்தின் ப்ரதிபிம்பமாகும்(சிதாபாஸனாகும்). மூன்றாவது ஸ்வப்னத்தில் கல்பிக்கப்பட்டதாகும். அவற்றில் முதலாவது, பரமார்த்திகமாகும். (ப்ரஹ்மமாகும்).*

अवच्छेदः कल्पितस्स्यादवच्छेद्यं तु वास्तवम् ।
तस्मिन्जीवत्वमारोपात् ब्रह्मत्वं तु स्वभावतः ।। 33 ।।
அவச்சேத: கல்பிதஸ்ஸ்யாதவச்சேத்யம் து வாஸ்தவம் ।
தஸ்மிஞ்சீவத்வமாரோபாத் ப்ரஹ்மத்வம் து ஸ்வபாவத: ।। 33 ।।

பதவுரை:-

अवच्छेदः ***அவச்சேத:*** *- பகுக்கப்பட்ட ஜீவன்*

कल्पितः स्याद् ***கல்பித: ஸ்யாத்-*** *கல்பிதமாகும்.*

अवच्छेद्यं ***அவச்சேத்யம்-*** *பகுப்பது*

तु वास्तवम् ***து வாஸ்தவம்-*** *எதுவோ (அதுவே) வாஸ்தவமாகும்.*

तस्मिन् ***தஸ்மின்*** *- அதனிடத்திலேயே*

जीवत्वम् ***ஜீவத்வம்*** *- ஜீவத்தன்மையானது*

आरोपात् ***ஆரோபாத்*** *- ஆரோபிக்கப்படுவதால்,*

ब्रह्मत्वं ***ப்ரஹ்மத்வம்*** *- ப்ரஹ்மத்வமானது*

तु स्वभावतः ***து ஸ்வபாவத:*** *- ஸ்வபாவமானதாகும்.*

பொழிப்புரை: பகுக்கப்பட்ட ஜீவன் கல்பிதமாகும். பகுப்பது எதுவோ (அதுவே) வாஸ்தவமாகும். அதனிடத்திலேயே ஜீவத்தன்மையானது ஆரோபிக்கப்படுவதால், ப்ரஹ்மத்வமானது ஸ்வபாவமானதாகும்.

अवच्छिन्नस्य जीवस्य पूर्णेन ब्रह्मणैकताम् ।
तत्त्वमस्यादिवाक्यानि जगुर्नेतरजीवयो: ।। 34 ।।
அவச்சின்னஸ்ய ஜீவஸ்ய பூர்ணேன ப்ரஹ்மணைகதாம் ।
தத்த்வமஸ்யாதிவாக்யானி ஜகுர்னேதரஜீவயோ: ।। 34 ।।

பதவுரை:-

अवच्छिन्नस्य	***அவச்சின்னஸ்ய-***	*பகுப்பட்டதான*
जीवस्य	***ஜீவஸ்ய***	*- ஜீவனுக்கு*
तत्त्वमस्यादि	***தத்த்வமஸ்யாதி-***	*தத்-த்வமஸி முதலிய*
वाक्यानि	***வாக்யானி***	*- மஹா வாக்கியங்களை கொண்டு*
पूर्णेन	***பூர்ணேன***	*- பூர்ணமான*
ब्रह्मण:	***ப்ரஹ்மண:***	*- ப்ரஹ்மத்தோடு*
एकताम्	***ஏகதாம்***	*- ஒன்றான தன்மை*
जगु:	***ஜகு:***	*- அறிவாயாக!*
इतर	***இதர***	*- அதற்கு அந்நியமாக வேறு*
न जीवयो:	***ந ஜீவயோ:***	*- ஜீவர்கள் முதலியவர்கள் இல்லை.*

பொழிப்புரை:- *பகுப்பட்டதான ஜீவனுக்கு தத்-த்வமஸி முதலிய மஹா வாக்கியங்களை கொண்டு பூர்ணமான ப்ரஹ்மத்தோடு ஒன்றான தன்மை அறிவாயாக! அதற்கு அந்நியமாக வேறு ஜீவர்கள் முதலியவர்கள் இல்லை.*

ब्रह्मण्यवस्थिता माया विक्षेपावृतिरूपिणी ।
आवृत्याखण्डतां तस्मिन् जगज्जीवौ प्रकल्पयेत् ।। 35 ।।
ப்ரஹ்மண்யவஸ்திதா மாயா விக்ஷேபாவ்ருதிரூபிணீ।
ஆவ்ருத்யாகண்டதாம் தஸ்மின் ஜகஜ்ஜீவௌ ப்ரகல்பயேத் ।। 35 ।।

பதவுரை :-

ब्रह्मणि ***ப்ரஹ்மணி*** - *ப்ரஹ்மத்தினிடத்தில்*

अवस्थिता ***அவஸ்திதா*** - *இருக்கின்ற*

विक्षेप ***விக்ஷேப*** - *விக்ஷேபம் மற்றும்*

आवृतिरूपिणी ***ஆவ்ருதிரூபிணீ*** – *ஆவரண வடிவான*

माया ***மாயா*** - *மாயாவானது*

अखण्डतां ***அகண்டதாம்***- *அகண்டமான (பிளவில்லாததை)*

आवृत्या ***ஆவ்ருத்யா*** - *மறைப்பதனால்*

तस्मिन् ***தஸ்மின்*** - *அந்த ப்ரஹ்மத்தினிடத்தில்*

जगत् ***ஜகத்*** - *ஜகத்தையும்*

जीवौ ***ஜீவௌ*** - *ஜீவர்களையும்*

प्रकल्पयेत् ***ப்ரகல்பயேத்***- *நன்கு கல்பிக்கின்றது.*

பொழிப்புரை:- ப்ரஹ்மத்தினிடத்தில் இருக்கின்ற விக்ஷேபம் மற்றும் ஆவரண வடிவான மாயாவானது அகண்டமான (பிளவில்லாததை) மறைப்பதனால் அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் ஜகத்தையும் ஜீவர்களையும் நன்கு கல்பிக்கின்றது.

जीवो धीस्थचिदाभासो भवेद्भोक्ता हि कर्मकृत् ।
भोग्यरूपमिदं सर्वं जगत्स्याद्भूतभौतिकम् ।। 36 ।।
ஜீவோ தீஸ்தசிதாபாஸோ பவேத்போக்தா ஹி கர்மக்ருத் ।
போக்யரூபமிதம் ஸர்வம் ஜகத்ஸ்யாத்பூதபௌதிகம் ।। 36 ।।

<u>பதவுரை:-</u>

धीस्थ	தீஸ்த	- புத்தியில் இருக்கின்ற
चिदाभासो	சிதாபாஸோ	- சைதன்யத்தின் ப்ரதிபிம்பமானது
जीवो	ஜீவோ	- ஜீவனாக
भवेद्	பவேத்	- ஆகின்றான். அவனே
भोक्ता हि	போக்தா ஹி	– போக்தாவாக,
कर्मकृत्	கர்மக்ருத்	- கர்மத்தை செய்பவன் ஆகின்றான்.
इदं	இதம்	- இந்த
सर्वं	ஸர்வம்	- அனைத்து
भूतभौतिकम्	பூதபௌதிகம்	– பூதங்களும்-பூதங்களால் உண்டான
जगत्	ஜகத்	- ஜகத்தும்
भोग्यरूपम्	போக்யரூபம்	– போகம் செய்யப்படுகின்ற வடிவாக
स्याद्	ஸ்யாத்	- ஆகின்றது.

<u>பொழிப்புரை:-</u> புத்தியில் இருக்கின்ற சைதன்யத்தின் ப்ரதிபிம்பமானது ஜீவனாக ஆகின்றான். அவனே, போக்தாவாக, கர்மத்தை செய்கின்ற கர்த்தாவாக ஆகின்றான். (அவனுக்கு) இந்த அனைத்து பூதங்களும்-பூதங்களால் உண்டான ஜகத்தும் போகம் செய்யப்படுகின்ற வடிவாக ஆகின்றது.

अनादिकालमारभ्य मोक्षात्पूर्वमिदं द्वयम् ।
व्यवहारे स्थितं तस्मादुभयं व्यावहारिकम् ।। 37 ।।
அநாதிகாலமாரப்ய மோக்ஷாத்பூர்வமிதம் த்வயம் ।
வ்யவஹாரே ஸ்திதம் தஸ்மாதுபயம் வ்யாவஹாரிகம் ।। 37 ।।

<u>பதவுரை</u>:-

अनादिकालम् ***அநாதிகாலம்-*** *அனாதி காலம்*

आरभ्य ***ஆரப்ய*** *- தொட்டு ஆரம்பித்து*

मोक्षात् ***மோக்ஷாத்*** *- மோக்ஷம் அடைவதற்கு*

पूर्वम्- ***பூர்வம்*** *- முன்பு வரை*

इदं द्वयम् ***இதம் த்வயம்-*** *(போக்தா-போக்யம் என்ற) இந்த இரண்டும்*

व्यवहारे ***வ்யவஹாரே*** *- வ்யவஹாரத்தில்*

स्थितं ***ஸ்திதம்*** *- நிலைபெற்றிருக்கும்.*

तस्माद् ***ஹஸ்மாத்*** *- ஆகையினால்*

उभयं ***உபயம்*** *- இரண்டும்*

व्यावहारिकम् ***வ்யாவஹாரிகம்*** *– வ்யவஹாரிகமே ஆகும்.*

<u>பொழிப்புரை</u>:- *அனாதி காலம் தொட்டு ஆரம்பித்து மோக்ஷம் அடைவதற்கு முன்பு வரை (போக்தா-போக்யம் என்ற இரண்டு அல்லது போக்தா-போக்யம், சிதாபாஸன் என்ற இந்த இரண்டும் வ்யவஹாரத்தில் நிலைபெற்றிருக்கும். ஆகையினால் இரண்டும் வ்யவஹாரிகமே ஆகும். (வாஸ்தவம் இல்லை).*

चिदाभासस्थिता निद्रा विक्षेपावृतिरूपिणी ।
आवृत्य जीवजगती पूर्वे नूत्ने तु कल्पयेत् ॥ 38 ॥
சிதாபாஸஸ்திதா நித்ரா விக்ஷேபாவ்ருதிரூபிணீ।
ஆவ்ருத்ய ஜீவஜகதீ பூர்வே நூத்னே து கல்பயேத் ॥ 38 ॥

பதவுரை:-

चिदाभास	***சிதாபாஸ***	*- ப்ரதிபிம்ப சைதன்யத்திலேயே*
निद्रा	***நித்ரா***	*- தூக்கம் (ஸுஷுப்தி),*
विक्षेप	***விக்ஷேப***	*- விக்ஷேபம் (சஞ்சலம்)*
आवृतिरूपिणी	***ஆவ்ருதிரூபிணீ***	*– மறைப்பு வடிவாக*
स्थिता:	***ஸ்திதா***	*- வீற்றிருக்கின்றன.*
पूर्वे	***பூர்வே***	*- முன்னுள்ள சைதன்யத்தை*
आवृत्य	***ஆவ்ருத்ய***	*- மூடி மறைத்து*
नूत्ने	***நூத்னே***	*- புதியதான*
जीव-जगती	***ஜீவ-ஜகதீ***	*- ஜீவர்களையும்-ஜகத்தையும்*
तु कल्पयेत्	***து கல்பயேத்***	*- கல்பிக்கப்படுகின்றது.*

பொழிப்புரை:- *ப்ரதிபிம்ப சைதன்யத்திலேயே தூக்கம் (ஸுஷுப்தி), விக்ஷேபம் (சஞ்சலம்) முதலியவை மறைப்பு வடிவாக (ஆவரண ரூபமாக) வீற்றிருக்கின்றன. முன்னுள்ள (ஆதாரமான) சைதன்யத்தை மூடி மறைத்து புதியதான ஜீவர்களையும்-ஜகத்தையும் ஆவரண சக்தியே கல்பிக்கின்றது.*

प्रतीतिकाल एवैते स्थितत्वात्प्रातिभासिके ।
न हि स्वप्नप्रबुद्धस्य पुनस्स्वप्ने स्थितिस्तयो: ।। 39 ।।
ப்ரதீதிகால ஏவைதே ஸ்திதத்வாத்ப்ராதிபாஸிகே ।
ந ஹி ஸ்வப்னப்ரபுத்தஸ்ய புனஸ்ஸ்வப்னே ஸ்திதிஸ்தயோ: ।। 39 ।।

__பதவுரை:-__

प्रतीतिकाल एव	***ப்ரதீதிகால***	*- தோன்றுகின்ற காலத்தில் மட்டுமே*
एते	***ஏதே***	*- ஜீவ-ஜகத்தானது*
प्रातिभासिके	***ப்ராதிபாஸிகே-***	*ப்ரதிபிம்ப சைதன்யத்தில்*
स्थितत्वात्	***ஸ்திதத்வாத்***	*- நிற்கின்றவைகளாக இருக்கின்றன.*
स्वप्न-प्रबुद्धस्य	***ஸ்வப்ன-ப்ரபுத்தஸ்ய***	*– கனவிலிருந்து விழித்தவனுக்கு*
पुन: स्वप्ने	***புன: ஸ்வப்னே-***	*மீண்டும் கனவில்-ஸ்வப்னத்தில்*
तयो:	***தயோ:***	*- அவைகளுக்கு*
न हि स्थिति:	***ந ஹி ஸ்திதி:***	*- இருப்பானது இருப்பதில்லை.*

__பொழிப்புரை:-__ தோன்றுகின்ற காலத்தில் மட்டுமே ஜீவ-ஜகத்தானது ப்ரதிபிம்ப சைதன்யத்தில் நிற்கின்றவைகளாக இருக்கின்றன. கனவிலிருந்து விழித்தவனுக்கு, மீண்டும் கனவில்-ஸ்வப்னத்தில் அவைகளுக்கு இருப்பானது இருப்பதில்லை.

प्रातिभासिकजीवो यस्तज्जगत्प्रातिभासिकम् ।
वास्तवं मन्यतेऽन्यस्तु मिथ्येति व्यावहारिक: ॥ 40 ॥
ப்ராதிபாஸிகஜீவோ யஸ்தஜ்ஜகத்ப்ராதிபாஸிகம் ।
வாஸ்தவம் மன்யதே(அ)ன்யஸ்து மித்யேதி வ்யாவஹாரிக: ॥ 40 ॥

பதவுரை:-

प्रातिभासिक ***ப்ராதிபாஸிக*** - *ஸ்வப்னத்திலுள்ள ப்ராதிபாஸிக*
जीवो ***ஜீவோ*** - *ஜீவன்*
य: ***ய:*** - *எவனோ, அவனே*
प्रातिभासिकम् ***ப்ராதிபாஸிகம்*** – *தோற்றமாய் ப்ரகாசிக்கின்ற*
तत् जगत् ***தத் ஜகத்*** - *அந்த (ஸ்வப்ன) ஜகத்தை*
वास्तवं ***வாஸ்தவம்*** - *வாஸ்தவம் (ஸத்தியம்) என்று*
मन्यते ***மன்யதே*** - *நினைக்கின்றான்.*
अन्य: ***அன்ய:*** - *அதற்கு அந்நியமான (நினைவுலக)*
व्यावहारिक: तु ***வ்யாவஹாரிக:-*** *வ்யவஹார ஜீவனோ*
मिथ्येति ***து மித்யேதி*** -*பொய் என்று நினைக்கின்றான்.*

பொழிப்புரை:- *ப்ராதிபாஸிக (ஸ்வப்ன லோக – தைஜஸன்) வடிவான ஜீவன் எவனோ, அவனே தோற்றமாய் ப்ரகாசிக்கின்ற அந்த ஸ்வப்ன ஜகத்தை வாஸ்தவம் (ஸத்தியம்) என்று நினைக்கின்றான். அதற்கு அந்நியமான வ்யவஹார ஜீவன் (ஜாக்ரத்ததில் உள்ளவன்) ஸ்வப்னத்தை பொய் என்று நினைக்கின்றான்.*

व्यावहारिकजीवो यस्तज्जगद्व्यावहारिकम् ।
सत्यं प्रत्येति मिथ्येति मन्यते पारमार्थिक: ।। 41 ।।
வ்யாவஹாரிகஜீவோ யஸ்தஜ்ஜகத்வ்யாவஹாரிகம் ।
ஸத்யம் ப்ரத்யேதி மித்யேதி மன்யதே பாரமார்த்திக: ।। 41 ।।

பதவுரை:-

व्यावहारिक ***வ்யாவஹாரிக-*** *வ்யவஹாரத்தில் உள்ள*

जीवो ***ஜீவோ*** *- ஜீவனானவன் (நாம்)*

य: ***ய:*** *- எவனோ, அவன்*

व्यावहारिकम् ***வ்யாவஹாரிகம்-*** *வ்யாவஹாரிகமான*

तत् जगद् ***தத் ஜகத்*** *- அந்த ஜாக்ரத ஜகத்தை*

सत्यं ***ஸத்யம்*** *- ஸத்தியம்-உண்மை என்று*

प्रत्येति ***ப்ரத்யேதி*** *- அறிகின்றான்.*

पारमार्थिक: ***பாரமார்த்திக:-*** *(ஆனால்) பாரமார்த்திக ஞானியோ*

मिथ्येति ***மித்யேதி*** *- (அந்த ஜகத்தை) மித்யா (பொய்) என்று*

मन्यते ***மன்யேதே*** *- நினைக்கின்றான்-அறிகின்றான்.*

பொழிப்புரை:- *வ்யவஹாரத்தில் உள்ள ஜீவனானவன் எவனோ, அவன் வ்யாவஹாரிகமான அந்த ஜாக்ரத ஜகத்தை ஸத்தியம்-உண்மை என்று அறிகின்றான். (ஆனால்) பாரமார்த்திக ஞானியோ (அந்த ஜகத்தை) மித்யா (பொய்) என்று நினைக்கின்றான்-அறிகின்றான்.*

पारमार्थिकजीवस्तु ब्रह्मैक्यं पारमार्थिकम् ।
प्रत्येति वीक्षते नान्यद्वीक्षते त्वनृतात्मना ।। 42 ।।
பாரமார்த்திகஜீவஸ்து ப்ரஹ்மைக்யம் பாரமார்த்திகம் ।
ப்ரத்யேதி வீக்ஷதே நான்யத்வீக்ஷதே த்வந்ருதாத்மனா ।। 42 ।।

<u>பதவுரை</u>:-

पारमार्थिक	***பாரமார்த்திக***	*- பாரமார்த்திக (ஸாக்ஷியாக உள்ள)*
जीवः तु	***ஜீவ: து***	*- ஜீவனோ, (ஞானி புருஷனோ)*
ब्रह्म-ऐक्यं	***ப்ரஹ்ம-ஐக்யம்***	*- ப்ரஹ்மதோடு தனக்குள்ள ஐக்கியத்தை*
पारमार्थिकम्	***பாரமார்த்திகம்***	*- பாரமார்த்திகம் (வாஸ்தவம்) என்று*
प्रत्येति	***ப்ரத்யேதி***	*- அறிகின்றான்.*
अन्यद्	***அன்யத்***	*-தனக்கு வேறாக (ப்ரஹ்மத்திற்கு வேறாக)*
न वीक्षते	***ந வீக்ஷதே***	*- (ஒன்றையும்) பார்ப்பதில்லை.*
तु अनृत आत्मना	***து அந்ருத ஆத்மனா***	*- ஆனால் பொய்யான ஜீவனோ*
वीक्षते	***வீக்ஷதே***	*- தனக்கு வேறானதை பார்க்கின்றான்.*

<u>பொழிப்புரை</u>:- *பாரமார்த்திக (ஸாக்ஷியாக உள்ள) ஜீவனோ, (ஞானி புருஷனோ) ப்ரஹ்மதோடு தனக்குள்ள ஐக்கியத்தை பாரமார்த்திகம் (வாஸ்தவம்) என்று அறிகின்றான். தனக்கு வேறாக (ப்ரஹ்மத்திற்கு வேறாக) (ஒன்றையும்) பார்ப்பதில்லை. ஆனால் பொய்யான ஜீவனோ தனக்கு வேறானதை பார்க்கின்றான்.*

माधुर्यद्रवशैत्यानि नीरधर्मास्तरङ्गके ।
अनुगम्याथ तन्निष्ठे फेनेऽप्यनुगता यथा ।। 43 ।।
மாதுர்யத்ரவசைத்யானி நீரதர்மாஸ்தரங்ககே ।
அனுகம்யாத தன்நிஷ்டே பேனே(அ)ப்யனுகதா யதா ।। 43 ।।

__பதவுரை:__-

यथा	***யதா***	*- எவ்விதமாக,*
माधुर्य	***மாதுர்ய***	*- இனிப்பு தன்மை*
द्रवशैत्यानि	***த்ரவ-சைத்யானி***	*- திரவ-குளிர்ச்சி தன்மைகள் என்று*
य: नीरधर्मा:	***ய: நீரதர்மா:***	*- நீரின் தன்மைகளாக எவைகளுண்டோ*
तरङ्गके	***தரங்கே***	*- (அவைகள்) நீரின் அலையிலும் கூட*
अनुगम्य	***அனுகம்ய***	*- உள்ளிருப்பதாக,*
अथ तत् निष्ठे	***அத தத் நிஷ்டே-***	*அந்த அலையின் மேல் நிற்கின்ற*
फेने अपि	**பேனே அபி**	*- நுரையிலும் கூட*
अनुगता	***அனுகதா***	*- (அவை) உள்ளிருக்கின்றன.*

__பொழிப்புரை:__- *எவ்விதமாக, இனிப்புத் தன்மை, திரவத் தன்மை, குளிர்ச்சித் தன்மை என்று நீரின் தன்மைகளாக எவைகளுண்டோ (அவைகள்) நீரின் அலையிலும் கூட உள்ளிருப்பதாக, அந்த அலையின் மேல் நிற்கின்ற நுரையிலும் கூட (அவைகள்) உள்ளிருப்பதாக இருக்கின்றன.*

साक्षिस्थास्सच्चिदानन्दास्सम्बन्धाद्व्यावहारिके ।
तद्द्वारेणानुगच्छन्ति तथैव प्रातिभासिके ॥ 44 ॥
ஸாக்ஷிஸ்தாஸ்ஸச்சிதாநந்தாஸ்ஸம்பந்தாத்வ்யாவஹாரிகே।
தத்த்வாரேணானுகச்சந்தி ததைவ ப்ராதிபாஸகே ॥ 44 ॥

<u>பதவுரை</u>:-

तथा एव ***ததா ஏவ*** - *அதுபோலவே,*

साक्षिस्था: ***ஸாக்ஷிஸ்தா:*** - *ஸாக்ஷியில் இருக்கின்ற*

सच्चिदानन्दा: ***ஸச்சிதாநந்தா:-*** *ஸத்-சித்-ஆனந்தங்களானது*

सम्बन्धाद् ***ஸம்பந்தாத்*** - *ஸம்பந்தத்தினால்*

व्यावहारिके ***வ்யாவஹாரிகே-*** *ப்ரதிபிம்ப ஜீவனிடத்திலும் (ஈச்வரன்)*

प्रातिभासिके ***ப்ராதிபாஸிகே-*** *பொய்யான ஜீவனிடத்திலும் (ஜீவன்)*

तद् द्वारेण ***தத் த்வாரேண-*** *அதன்மூலம்*

अनुगच्छन्ति ***அனுகச்சந்தி*** - *சென்றடைகின்றது.*

<u>பொழிப்புரை:</u>- *அதுபோலவே, ஸாக்ஷியில் இருக்கின்ற ஸத்-சித்-ஆனந்தங்களானது ஸம்பந்தத்தினால் ப்ரதிபிம்ப ஜீவனிடத்திலும் (ஈச்வரனிடத்திலும்) அதன் மூலம் பொய்யான ஜீவனிடத்திலும் (ஜீவன்)சென்றடைகின்றது. (அதாவது ஈச்வரன்-ஜீவன் என்ற அனைத்திலும் ஸச்சிதானந்தமே இருக்கின்றது என்று அர்த்தமாகும்).*

लये फेनस्य तद्धर्मा द्रवाद्यास्स्युस्तरङ्गके ।
तस्यापि विलये नीरे तिष्ठन्त्येते यथा पुरा ।। 45 ।।
லயே பேனஸ்ய தத்தர்மா த்ரவாத்யாஸ்ஸ்யுஸ்தரங்ககே ।
தஸ்யாபி விலயே நீரே திஷ்டந்த்யேதே யதா புரா ।। 45 ।।

__பதவுரை__:-

लये ***லயே*** *- லயத்தில் (நுரை ஒடுங்குகின்ற நிலையில்)*
फेनस्य ***பேனஸ்ய*** *- நுரையினுடைய*
द्रवाद्या: ***த்ரவாத்யா:*** *- திரவத்தன்மை முதலிய*
तद् धर्मा ***தத் தர்மா*** *- அந்த தர்மங்கள்*
तरङ्गके ***தரங்கே*** *- அலையில்*
स्यु: ***ஸ்யு:*** *- இருக்கின்றன. (ஒடுங்குகின்றன).*
तस्य अपि ***தஸ்ய அபி*** *- அந்த அலையும் கூட*
विलये ***விலயே*** *- ஒடுங்குகின்ற நிலையில்,*
ते यथा ***தே யதா*** *- அவைகள் எவ்விதமாக*
पुरा ***புரா*** *- முன்பு இருந்தனவோ அதுபோலவே*
नीरे ***நீரே*** *- நீரில் அந்த தர்மங்கள்*
तिष्ठन्ति ***திஷ்டந்தி*** *- நிற்கின்றன.*

__பொழிப்புரை__:- லயத்தில் (நுரை அலையில் ஒடுங்குகின்றபோது) நுரையினுடைய திரவத்தன்மை முதலிய அந்த தர்மங்கள் அலையில் இருக்கின்றன. (நுரை என்ற நாமம்-ரூபம் ஒடுங்குகின்றன-ஆனால் திரவத்தன்மை முதலியவை ஒடுங்குவதில்லை). அந்த அலையும் கூட நீரில் ஒடுங்குகின்ற நிலையில், அவைகள் எவ்விதமாக முன்பு இருந்தனவோ அதுபோலவே நீரில் அந்த தர்மங்கள் நிற்கின்றன.

प्रातिभासिकजीवस्य लये स्युर्व्यावहारिके ।
तल्लये सच्चिदानन्दाः पर्यवस्यन्ति साक्षिणि ।। 46 ।।
ப்ராதிபாஸிகஜீவஸ்ய லயே ஸ்யுர்வ்யாவஹாரிகே ।
தல்லயே ஸச்சிதாநந்தா: பர்யவஸ்யந்தி ஸாக்ஷிணி ।। 46 ।।

<u>பதவுரை</u>:-

व्यावहारिके ***வ்யாவஹாரிகே-*** *வ்யவஹாரிக ஜீவனிடத்தில்*

प्रातिभासिक ***ப்ராதிபாஸிக-*** *ஆபாஸ சைதன்யம் என்ற*

जीवस्य ***ஜீவஸ்ய*** *- ஜீவன்*

लये ***லயே*** *- லயமாகின்ற நிலையில்*

सच्चिदानन्दाः ***ஸச்சிதாநந்தா:-*** *ஸத்-சித்-ஆனந்தங்கள்*

स्युः ***ஸ்யு:*** *- இருக்கின்றன.*

तत् लये ***தத் லயே-*** *அந்த வ்யாவஹாரிக ஜீவனும் லயமாகின்ற போது*

साक्षिणि ***ஸாக்ஷிணி-*** *ஸாக்ஷியினிடத்தில் (ப்ரஹ்மத்தினிடத்தில்)*

पर्यवस्यन्ति ***பர்யவஸ்யந்தி-*** *முடிவை அடைகின்றன.*

<u>பொழிப்புரை</u>:- வ்யவஹாரிக ஜீவனிடத்தில் (ப்ரதிபிம்ப சைதன்யத்தினிடத்தில்) ஆபாஸ சைதன்யம் (பொய்யான ஜீவன்) என்ற ஜீவன் லயமாகின்ற நிலையில் ஸத்-சித்-ஆனந்தங்கள் இருக்கின்றன. அந்த வ்யாவஹாரிக ஜீவனும் லயமாகின்ற போது ஸாக்ஷியினிடத்தில் (ப்ரஹ்மத்தினிடத்தில்) முடிவை அடைகின்றன.

।। ஓம் தத் ஸத் ।।